V. 6 No. 50 21 Dec 1933

M211, N28KN
N33.6.50
189174

980

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 6.] 1933 ௵ டிஸம்பர் ௴ 21௨ [No. 50

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 885
2. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 887
3. அப்பர் (64 கலை-வியாகரணம்-யாப்பியல் ஆய்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 890
4. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம் 891
5. கம்பராமாயணம்—(சபரி பிறப்பு நீங்குபடலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 893
6. காற்றுமழை (ஆராய்ச்சி)
Shakespeare's Tempest 895
7. அட்டவணை. 898
8. வர்த்தமானம் 900

## கலாநிலயம்

### ஆறுவதாண்டின் நிறைவு.

இவ்விதழினோடு நம் கலாநிலயம் ஆறுவதாண்டின் நிறைவினை அரிதின் எய்துகின்றது. என்றுமே, காகிதத்திற்கும் அச்சிற்கும் தபால் செலவிற்கும் பற்றாத வருவாயுடைய இப்பத்திரிகை இவ்வாண்டின் இடையில் அடைந்தவோர் நிலையினால் சிறிதுகாலம் நடக்கமாட்டாமல் நிற்கவும்வேண்டி நேர்ந்தது. மீண்டும் இதனைத் துவக்கத்தான் ஆகுமோ என்னும் ஐயம் பெரிது கொண்டிருந்தோம். அச்சமயம், எமது நோக்கத்தையும் யாம் செய்யும் காரியத்தின் தன்மையையும் நன்குணர்ந்திருந்த ஸ்ரீமான் S. Rm. CT. ஜம்புலிங்கம் செட்டியாரவர்கள், அவர்தம் சகோதரர் ஸ்ரீமான் S. Rm. C T. பழனியப்பச்செட்டியாரவர்கள், ஸ்ரீமான். S. Rm. C T. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்; ஆகிய இவ்விருவரோடும் ஒருமனமுடன் சேர்ந்து இக்கலாநிலயத்தை மீண்டும்உயிர்ப்பிப்பதற்கு வேண்டிய உதவியாக, மெய்வருத்தமும் காலச் செலவும் பாராமல், தம் நாட்டினரிடையே சந்தா நண்பர்களைச் சேர்த்தளிக்குமொரு முயற்சியில் ஈடுபட்டமையாற்றான், இன்று இவ்விதழ்வரையில் இக் கலாநிலயம் எய்தக்கூடியதாயிற்று. இவ் வுண்மைநண்பர்களுக்கு மீண்டும் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். கலாநிலயம் செய்யுங் கருமமும் அதனைச் செய்யும்வகையும் நன்மையின்பால் நாட்டமுடைத்தெனக் கருதும் நண்பர்களனைவரும் அன்னவர்பால் நன்றிகாட்டவேண்டியவர்களே. இவர்களோடு, ஸ்ரீமான் N. S. AR. அருணாசலம்செட்டியா ரவர்களும், ஸ்ரீமான் C. V. C T. V. வெங்கடாசலம்செட்டியா ரவர்களும், ஸ்ரீமான், AR. L. V. நடராஜன்செட்டியா ரவர்களும், ஸ்ரீமான் S. V. L. Rm. நாராயணன் செட்டியாரவர்களும் M. R. M. A. சொக்கலிங்கம் செட்டியாரவர்களும் இத்திறத்தில் அன்போடு எமக்குச் செய்துவருகின்ற உதவியினால் யாம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

கலாநிலயப்பத்திரிகைக்கு இவ்வகை ஆதரவு அன்புகூர்ந்து அளிப்பது மன்றி, கலைநலங் கனிந்த வாழ்க்கையால் கடவுளின் திருவடிகளைத் தழுவிக்கொள்வதல்லால் இச்சிற்றுயிர்க்கு இவ்வுலகில் வேறோர் பொருளும் கருமமும் இல்லை என்னும் உறுதியுடைய எமது முயற்சியில் ஆர்வமுடைய நம்பிக்கைவைத்தவர்வளாய் ஸ்ரீமான் S.Rm.C T. ஜம்புலிங்கம்செட்டியாரவர்கள், பத்திரிகையின் மூலமாய் அம்முயற்சி நடப்பதுடன் வேறுவகைகளிலும் விரைவிற் பரவவேண்டும் என்னும் ஆதரத்தினால், செட்டிநாட்டில் கலாநிலயக் கல்விக்கழகம் ஒன்று நிறுவி, தாமும் தம்சகோதரரும் அதன் செலவையெல்லாம் ஏற்றுக்கொண்டு, சென்னையிலிருந்து ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் அவர்களைமாதம் இருமுறைவருவித்து, முறையே ஆங்கிலமும் தமிழும் கற்கவிரும்புவார்க்குக்கானாடுகாத்தானில் பாடவகுப்புக்களும், காரைக்குடியில் கம்பராமாயணப் பிரசங்கங்களும் நடத்திவைக்கின்றனர். இன்னதற்கு அவர் வேண்டுவதற்கேனும் நாம்கொடுப்பதற்கேனும் உரிய கைம்மாறு இல்லை. ஏதும் பெருமையைக் கருதி அவர் இது செய்கின்றா ரல்லராதலின் கடவுளின் அருளிற்கே பாத்திரமாகின்றார்.

கலாநிலயத்தின் நோக்கமும் கருமமும் பரவும்பொருட்டுச் சில மாதங்களுக்குக்குமுன் காஞ்சீபுரத்தில் கலாநிலயக் கழகம் ஒன்று நிறுவப்பெற்று, அங்கு நமது உதவி ஆசிரியர் ஸ்ரீமான் K. இராஜகோபாலாச்

சாரியாரவர்களால் தமிழ் வகுப்புக்கள் நடந்து வருகின்றனவென்பதை நமது நண்பர்கள் அறிவார். அவ்விடத்தில் இவ்வகுப்புக்களை நடத்துவதிலும் சந்தா நண்பர்கள் சேர்த்துத் தருவதிலும் எமக்கு உண்மையாய உதவியளித்துவருகின்ற ஸ்ரீமான் V. வேதாந்தாச்சாரியார் ஸ்ரீமான் Dr. P. S. ஸ்ரீநிவாச ஐயர், ஸ்ரீமான் M கண்ணப்ப முதலியார், ஸ்ரீமான் T. S. ஜபராமஐயர் முதலிய நண்பர்களும் எம்முடைய நன்றிக்குப் பெரிதும் உரியவராகின்றார்.

சென்னையிலுள்ள நம் கல்விக்கழக வகுப்புக்கள் முறையே நடந்துவருகின்றன. இவ் வகுப்புக்களுக்கும், கானாடுகாத்தானிலும் காஞ்சீபுரத்திலும் உள்ள வகுப்புக்களுக்கும், காரைக்குடி முதலிய இடங்களில் நடைபெறும் கம்பராமாயணப் பிரசங்கங்களுக்கும் வந்து, தமிழின் சுவையை விரும்பிக்கொள்கின்ற நண்பர் அனைவருக்கும் எம் வந்தனத்தைச் செலுத்துகின்றோம். இவர்தாம், தமிழின் அருமையும், கலாநிலயம் விழைகின்ற வோர் வாழ்க்கைச்செம்மையும் எங்கெங்கும் யாவர்மாட்டும் விரைவிற் பரவுமாறு உதவிகள் புரிவாரென்று யாம் வைத்திருக்கும் நம்பிக்கை, கடவுளின் சித்தமும் அதுவேயாயின், பொய்த்திடாது. இதற்கு அறிகுறியாகச் சென்னை வகுப்பைச்சேர்ந்த ஸ்ரீமான் V. முத்துக்குமாரசுவாமிசெட்டியாரவர்களும், ஸ்ரீமான் T. R. வெங்கடாசலம் பிள்ளையவர்களும், கலாநிலயத்தின் நோக்கம் பரவுதற்குரிய உதவிகளை அன்புடன் புரிந்துவருகின்ற நன்றியை யாம் மறக்கமாட்டோம்.

இன்னவாறு பலவிடங்களிலிருந்து அன்புபற்றி உதவிபுரியும் நண்பர்கள்பலர் வாய்க்கப்பெற்ற கலாநிலயம் அடுத்த ஆண்டில் நடக்க இயல்வதாகின்றதெனினும், அது உற்ற இடுக்கண் கடப்பதற்கும் மீண்டும் இவ்வகை இடுக்கண் உறாமல் காப்பதற்கும் இக்கலாநிலய நண்பராயினோர் அனைவர்தம் அன்பும் உதவியும் அதிகம் வேண்டியிருக்கின்றது. எவ்விதமான நன்கொடையும் கலாநிலயம் ஏற்பதில்லை என்பதை நமது நண்பர்கள் நன்கறிவார். கலாநிலயம் வேண்டுவதெல்லாம் சந்தா நண்பர்களே. இப்பொழுது சந்தா நண்பர்களாயிருப்பவர்களும், கலாநிலயக் கல்விக் கழக வகுப்புக்களில் சேர்ந்திருப்பவர்களும் ஏனைய அன்பர்களும், ஒவ்வொருவரும் ஒவ்வொருவரேனும் புதிய சந்தா நண்பர் சேர்த்து உதவ மனம் வைப்பார்களாகின், அவ்வுபகாரம் இப்பொழுது காலத்தாற் செய்ததாகும். இதுகூட இயலாதென்று ஒருவரும் முயலாதிருக்கமாட்டார். முயன்றும் இயன்றதில்லையாயின் அதனையேனும் எமக்குத் தயைசெய்து தவறாமல்தெரிவிக்கவேண்டுகின்றோம். முயன்று முடித்தவர்தாம்கலாநிலயத்தின்பால் அன்புடையவர் என்பதில்லை. மற்று, முன் உரைத்தபடி இக் கலாநிலயம் செய்கின்ற கருமத்தில் நம்பிக்கை இல்லாதார் இதுபற்றி யாதும் முயலவேண்டுமென யாம் எதிர்பார்க்கவுமில்லை. தம் தம் உள்ளத்தினாலன்றி எமது சொற்களால் ஒருவரும் தூண்டப்பெற்றவர் ஆகவேண்டுமென்பது எம்விருப்பமன்று.

இப்பொழுது சந்தாநண்பர்களாயிருப்பவர் புரிதற்குரிய பேருதவி இன்னுமொன்றுளது. இந்த டிஸம்பர் மாதத்துடன் சந்தா முடிந்தவர்கள் அனைவரும் உடனே தம் மேல்வருடச்சந்தாவைமணியார்டரில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இப்புதுவருட ஆரம்பச்செலவிற்குப் பணம் அதிகம் வேண்டியிருக்கின்றது. வரவேண்டிய சந்தாக்கள் விரைவில் ஒருங்கேவந்துசேருமாயின் எமக்குஅத்தொகைமிக்க உதவியாய் நிற்கும். ஆதலின் யாம் தனித்தனி நினைவுக் கடிதங்கள் வரையவேண்டுமென்றும், வி.பிக்கள் அனுப்பவேண்டுமென்றும் எதிர்பார்க்காமல், இவ்விதழ் கண்ட மறுதபாலில் ஒருமனமாய் அனைவரும் தம் சந்தாவைச் செலுத்தி உதவுவார்கள் என நம்புகின்றோம். அன்னவாறு ஒருவாரத்திற்குள் அனுப்பித் தராதவர்க்கு அடுத்த இதழை வி. பி. யில் அனுப்புவோம். தயைசெய்து அதனைத்தவறாமல்பெற்றுக்கொண்டு திரும்பாமல் காப்பதன் தகுதியை யாம் உரைக்கவேண்டா. மலேயா நாட்டிற்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்குள்ள நண்பர்கள் அதனை எதிர்பாராமல் சந்தாவை அனுப்பியுதவுதற்கு மறத்தலாகாது. விரைவில் அனுப்பிவைக்கவில்லையாயின், அதன் காரணம் எமக்குத் தெரியும்வகையில்லாமை பற்றி, அவர் கருத்துத் தெரிகின்றவரையில் அவர்களுக்குப் பத்திரிகை அனுப்பாமல் நிறுத்திவைத்துக்கொண்டு, அவர் சந்தாத்தொகை மணியார்டரையோ கடிதத்தையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்போம்.

இறுதியிற் கூறுகின்றோமெனினும் கலாநிலயத்திற்குக் கட்டுரைகள் வரைந்து உதவிவருகின்ற எமது அருமை நண்பர் அனைவர்க்கும் யாம் கூர்கின்ற நன்றி மிகமிகப் பெரிது.

அடுத்த ஆண்டில், கம்பராமாயணக் கட்டுரையில் கிஷ்கிந்தாகாண்டம் ஆரம்பமாகும். நமது தமிழ்ப் பாடம் அடுத்த ஆண்டிலுந் தொடர நிற்கின்றது. வில்லிபாரதத்தில் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், நைடதத்தில் நளன் தூதுப் படலமும், பாடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். புணரிலக்கணத்தின் விரிவையெல்லாம் அடுத்த ஆண்டு இதழ்களிற் காணலாம். இப்பொழுது வருகின்ற முறையிலேயே தலையங்கங்கள் வரைந்துவரப்பெறும். ஷேக்ஸ்பியர் நாடகம் மற்றொன்று மொழிபெயர்ந்துவரினும் வரலாம்.

முன்னைய ஆண்டு இதழ்களில், 'சூளாமணி' என்னும் உயரியகாவியத்தின் ஓர் ஐந்நூறு செய்யுள்கள் வரையில் உரையுடன் எழுதப்பெறலாயின. அதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில், வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் M.A., B.L., அந்நூலை உரையுடன் வரைந்துவருவார். இதுகாறும் அச்சேறாத "மதுரைக்கோவை" என்னும் நூலைத் தக்க குறிப்புக்களுடன் பதிப்பித்துத்தர ஸ்ரீமான் S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B.A., B.L., இசைந்திருக்கின்றனர். ஸ்ரீ, காஞ்சி உபயவேதாந்த வித்வான் பிரதிவாதிபயங்கரர் ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள், எமக்குக் கட்டுரைகள் வரைந்து உதவ அருள்கூர்ந்துளர்.

இதுகாறும் வெளிவராத, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்தம் கீர்த்தனைகள் பல, உரையுடனும், மற்றவர் கற்றுப் பாடுவதற்கு வேண்டிய ஸ்வரங்கள் இராகக் குறிப்புக்கள் தாளக் குறிப்புக்கள் முதலியவைகளுடனும், அடுத்த வாண்டு இதழ்களில் ஸ்ரீமான் P. B. ஸ்ரீநிவாசாச்சாரியாரவர்கள் B.A., இவ்விதழ்களில் பதிப்பித்துத்தருவார்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[879-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து 2-ம் தசகம்

8-ம் பாசுரம்.

*பிணக்கி யாவையும் யாவரும்*
*பிழையாமற் பேதித்தும் பேதி யாததோர்*
*கணக்கில் கீர்த்தி வெள்ளக்*
*கதிர்ஞான மூர்த்தியினை*
*யிணக்கி யெம்மை யெந்தோழிமார் விளையாடப்*
*போதுமினென்னப் போந்தோமை*
*யுணக்கிநீ வளைத்தா லென்சொல்லா*
*ருகவா தவரே.*

**உரை:**—எந்தோழிமார் - என்னுடைய தோழிமார்களே, **விளையாடப் போதுமின்** - நாம் எல்லோரும் விளையாடலாம் வாவென்று, **எம்மை இணக்கி** - என்னையும் மற்றுஇரண்டொருவரையும் ஸம்மதிப்பித்து, **போந்தோமை** - இந்த இடத்தில் ஆட வந்தவர்களாகிய எங்களை, **உணக்கி** - எங்களை உன் திவ்விய வடிவழகால் யாமாடும் ஆட்டத்தில் ரஸமநுபவிக்க வொண்ணாதபடி., **வளைத்தால்** - உன் ஸமீபம்இல்லாதபடி வேறொரு இடத்துக்குப் போய்ப்புகப் பிரயாணப்படுகிறவர்களை "நான்போகவிடேன்" என்று வளைத்தால், **உகவாதவர்** - உன்னை வெறுக்கிற அஸுரபிரகிருதிகளான மநுஷர்கள் : உன் விரோதிகள், **என்** - என்ன தூஷணைகளை, **சொல்லார்** - சொல்ல மாட்டார்கள்.

Scene - தங்கள் விளையட்டத்தைக் கண்ணன் கலைக்கிறானென்ற மனவெறுப்பால் (disgust) கோபிபிராட்டியும் ஸஹிகளும் தங்கள் கூட்டத்தை வேறோர் இடத்தில் ஸ்தாபித்துக்கொண்டு விளையாடப் புறப்படுகைக்கு எத்தனிக்கிறார்கள்; எழுந்திருப்பதற்கு முன்னரே அவர்களுடைய நோக்கத்தை யறிந்து நான் போகவொட்டேன் என்று வளைக்கிறான். ஆறுவது பாசுரத்தில் "நம்பி! கழகமேறேல்" என்று கோபி, கண்ணனைத் தகைந்ததுபோக இப்பாசுரத்தில் கண்ணன் அவர்களை வளைப்பதற்கு ஹேது இக் கோபி பிராட்டி தன் தோழிமார்களோடு கூட "நாம் புறத்திறங்கிப் போவோ மென்று;" கூப்பிட அவன் தடுக்கிறான்.

**குறிப்பு:**—இப்பாசுரத்தின்கண் இருக்கின்ற முதல் இரண்டடிகளால் "ஸர்வசக்தி ஜகத்காரணம் ஜகத்ரக்ஷணம், ஜகத்பிரளயம், ஜகத் சிருஷ்டி புனர்பிரளயம் புனர் ஜகத்சிருஷ்டி முதலான ஸர்வவல்லமையைப்புரியும் மஹானாகிய ஞான சுவரூபனே! உன் விரோதிகள், ஸர்வேசுவரன் இடைச்சிச் சிறுமிகளோடு உள் கலந்து ஸகலவிதமான ஸம்சிலேஷமும் நடாத்துகிறானென்று தூஷிப்பார்கள் என்கிறாள். உகவாதவர் - வேண்டாதவர்கள்; என் சொல்லார் - தூஷணையான அவதூறுகள் எல்லாம் சொல்ல வல்லவர்களாவார்கள். முதல் இரண்டடிகளும் நான்காவதடியும் சம்பாஷணம்.

**பிணக்கி** - ஒன்றுசேர்த்து (ஜகத்பிரளயத்தில் பிருதிவி மண்டலங்களிலுள்ள ஜீவாத்மாக்கள், ஜடவஸ்துக்கள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டித் தன் வயிற்றிலேபகவான்வைத்து ரக்ஷித்ததைப்பற்றிக்கூறியபடி) **யாவையும் யாவரும்**-ஜடவஸ்துக்கள் ஜீவாத்மாக்கள், **பிழையாமல் பேதித்தும்** - ஒன்று சேர்ப்பத்தால் உட்கலப்பு (ஸங்கரம்) இல்லாமல் தனித்தனியாக வைத்திருந்தும், **பேதியாதது** - ஒரு ஜீவாத்மாவின் குணாதிசயங்கள் மற்றொரு ஜீவாத்மாவுக்குப் புண்ணிய பாபரூபத்தால் கலவாது அவரவர் பூர்வகர்மத்துக்குத் தக்கபடி புதுப் புனர்சிருஷ்டி காலத்தில் தன் ஸங்கல்பத்தா லமைத்துவைக்க வல்லனாய், **ஓர்** - ஆச்சரியமான சக்தியுடையவனாய், **கணக்கில்** - கணக்கிலகப்படாத எண்ணிறந்த (ஜீவாத்மாக்கள் கோடியுமல்ல பலவென்ற கருத்து) **கீர்த்தி வெள்ளம்** - (ஆற்றின் நீர்வெள்ளம் க்ஷணத்துக்கு க்ஷணம் வேறாய் மாறுவதுபோல் ஜீவாத்மாக்கள் உலகங்களில் தோன்றித்தோன்றி மாறுவதை உரைக்கிறபடி) ஜீவாத்மாக்களின் ஸ்வரூபத்தைத்தாங்கி அவற்றின் நிர்வாஹத்தைச் செய்யவல்ல யசஸை உடையவனாய், **கதிர்**-மஹா தேஜஸை அந்த அந்தஜீவாத்ம சுவரூபத்துக்கு அளித்து அமைக்கும், **ஞானமூர்த்தியினாய்** - ஞானத்தையே சுயரூபமாகவுடையவனே! என்று ஸ்ரீகிருஷ்ணனை அழைக்கிறபடி. பகவானானவன்ஜகத்இரக்ஷணம்முதலியமேற்குறித்த எல்லாக் காரிய கலாபங்களையும் வேறு உதவியில்லாமல் தம் சங்கல்பத்தாலேயே செய்கிறானென்று குறிக்கவே, வேதங்கள் அவனை "ஸத்திய ஸங்கல்பன்" (அவன் நினைத்தவுடன் அதே காரணத்தினாலேயே அவன் நினைவின் நிச்சயப்படி தனக்குத்தானாய்க் காரியங்கள் நடந்தேறுவதை வல்லமையாக உடையவன்) என்று ஓதுகின்றன. "ஞானம்" என்பது ஷை ஸங்கல்ப ரூபம்.

**விசேஷக் குறிப்பு:**—I இக் கோபிபிராட்டி, ஸ்ரீகிருஷ்ணன் பசுமேய்க்க வருவான் அவனை தடவிக்கலாம் என்றே வந்தவள். எனினும், இப்போழ்து தான் எதிர்பார்க்காமலிருக்கக் கண்ணன் வந்து தங்கள் விளையாட்டை அக்கிரமமாய்த்தடுத்துவிட்டதாகவேஷம்போடுகிறாள்.

II மேலும் இவள் சங்கேதமிட்டுக்கொண்டு தோழிமார்களை ஸர்வ சாமான்களுடன் அழைத்து வந்திருக்க அவர்கள் ஷை தோழிமார்கள் தன்னை விளையாடவலிகட்டாயமாய் அங்குஅழைத்துவந்ததாகவும் ஸமயம்தப்பிக் கண்ணனின்முன் எதிர்ப்பட்டுப்போனதாகவும் சொல்வது கள்ள வார்த்தை.

III தெரியாமல் அறியாமல் கண்ணன் கலஹக்காரன் நம்மைத் தடுப்பான் என்ற உணர்ச்சியில்லாமல் இங்கு வந்துவிட்டோமே என்று தன்னை வெறுத்துக் கொள்ளுகிறதாகக் காண்பிக்கிறாள்.

IV. அதனால் கண்ணனை மனக்கலக்கத்தோடு ஒரு நோக்கு நோக்கினாள். கண்ணன் தன் ஸௌந்தரியத்தாலு மழகாலும் தன் கண்களாகிய வலையிலகப்படுத்துவான் ஆரம்பித்துவிட்டானன்றோ. "அவன் வணங்குகிறான்" என்றல்லவோ அவள் குறை.

V. இந்த "உணக்கின்" நிமித்தங்கொண்டே அவள் வெளியில் புறப்பட்டுப்போக உற்சாகம் கொண்டது நின்றுவிட்டது. கழகம் இருந்தவிடத்திலேயே விளையாட்டாக மண் மணல்கொண்டு வீடுகள் அமைக்கவும் அடிசில் சமைக்கவும் செய்தார். அடுத்த பாசுரத்தில் இவற்றைக் கண்ணன் தன் திருவடிகளைக்கொண்டு

அழித்தானென்று குறைசொல்லிக் குற்றம் சாட்டுகிறாளாகையால் மேற்கூறியது ஊஹம்; அடுத்த பாசுரத்துக்கு இதுவே (சந்தர்ப்பம்). ஆகவே கண்ணன் முகம் பாராதே நீ அநாதரவு செய்வது உனக்குக் குறைவாகுமென்று சொல்லுகிறாள்.

---

9-ம் பாசுரம்.

உவகையா னெஞ்சமுள் ளுருகியுன்
தாமரைத் தடங்கண் விழிகளி
னகப்படுப்பா னழித்தாய்
யுன்திரு வடியாற்
தகவு செய்திலை யெங்கள் சிற்றில்லும்
யாமடு சிறுசோறுங் கண்டுநின்
முகவொளி திகழ முறுவல்
செய்து நின்றலையே

அவதாரிகை:—இக் கோபிபிராட்டி ஸ்ரீகிருஷ்ணன் ஸௌந்தரியத்தால் தன்னைப்பீடிக்கிறானென்றோ அல்லது பீடிப்பானென்றோ பயப்பட்டுப் பேசினாள். அவனோடு எவ்விதத்தாலாயினும் கலந்து தம் ஊடல் தீரவேண்டுமென்று இப்பிராட்டிக்கு அவன் தியானமே மனதில் குடிகொண்டிருக்கவேறே ஏதோ விளையாட்டு விகல்பம் தன்னைத் தூண்டுவதாகத் தோற்றுவிக்கச் சிறு வீடுகள் இழைத்துச் சிறுசோறு சமைப்பதாகத் தனக்குக் காரியமிருப்பதாய்க் கண்ணன் நினைக்கட்டுமென்று வேஷம் போடுகிறாள்.

ஆறாயிரப்படியில் காணும்உரை இப்பாசுரத்துக்கு வெகு பொருத்தமாயிருப்பதைநாமிங்கு எடுத்துவரைவோம். தன்னை யெம்பெருமான் இப்படிக்குவளைக்கச் செய்தேயும்அவனைக் கடாக்ஷியாதேயிருந்துதான்தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறட்டு விளையாடாநிற்க இவனது கடாக்ஷமில்லாது தனக்கு ஆத்மதாரணமில்லாமையாலே-இவள் தன்னோடு கலப்பில்லாமற்போனால் கண்ணன் ஆற்றியிருந்து உயிரைக் காப்பாற்ற வல்லவனல்லவென்றுதாத்பரியம்-ஏதேனும்ஒருபடியாலிவள்நம்மைக்கடாக்ஷிக்க அமையுமென்றுபார்த்துஇவள்தன்னைப்பார்த்தருளும்படியாகஇவள்சிற்றில்லை, தன் திருவடிகளாலே யழித்தருள இவளும் அவனுடைய திருமுகத்தைப் பார்த்து அவனுடைய திருக்கண்களின் அழகாலே (வசீகிருதையாய்) அவன் வசம் ஒடுங்கும்படி அகப்பட்டு, உன் பக்கலுள்ள ஆசையாலே நெஞ்சுருகிக்கொண்டுஉன் தாமரைத் தடங்கண் விழிகளாகிற வலையிலே நாங்களகப்படுகைக்காக எங்கள் சிற்றில்லும் யாமடும் சிறுசோறும்உன் திருவடிகளாலழித்தருளினாய். நாங்கள் விளையாடுகிறபடியைக் கண்டு உகந்துகொண்டு நிற்கமாட்டுவாயல்லை. ஒன்றும் கிருபையில்லை யாகாதே யென்று கொண்டு தன் மனத்திட்பத்தை(மனோநிச்சயத்தை)யெம்பெருமான் தன்னழகாலே யழித்ததாக அவனை இன்னாதாகிறாள்.

பதக் குறிப்புக்கள்:—தகவு-தயவு, முகவொளி திகழ முறுவல் செய்திலை- ஸர்வாங்கீகாரமான மந்தஹாஸமொன்றும் (Sweet smile of total approval) செய்யவில்லை.அதினாலதன்மேல் கிருஷ்ணனுக்குப் பூர்ணபிரீதி இன்னம் வரவில்லை, என்று ஆயாஸம். மெய் சொல்லப்போனால் இவளின் உண்மையான மனக்குறைஎன்னவென்றால் கண்ணன் பணிந்துதாழ்ந்து தன் ஸந்நிதியில் வீழ்ந்து அவனின் அவாவை வற்புறுத்திச் செய்த ஆலஸியத்தை மன்னித்துப் பூரண பிரஸாதத்தை யருள்செய்யவேண்டுமென்றுகேட்காதிருக்கின்றானென்று இவளின் தோழிமார்கள் கூட்டே அவனித்தனையும் செய்து அருள்பெற இடையூறாய்த்தீர்ந்தது. தனித்திருந்தாளாயின் அவளின் திருவடிகளே தனக்கு உதவியென்று கண்ணன் வீழ்ந்திருப்பானென்பதற்கு ஐயமில்லை. "பன்மாயக்கள்வன்" (அதாவது ஆச்சரியமான பொய்களைப் பேசவல்லவன்) என்று வள்ளுவனார் கூறியது இவனைப் பற்றியே வெகு பொருத்தம். பிராட்டியின் அன்பும் காமமும் ஏகதேசமென்றும் தன் "காதல் கடலினும் பெரிதென்றும்" நிரூபிக்கக்கூடும் கலவியில் ஆற்றாதவனாய்த் தோற்றுவிக்கவும், அன்புபாராட்டுவதில் தான்முந்தற ரஸிக்கையாலும் பணிக்கும் மொழியின் இனிமையாலும் அகமலர்ச்சியால்வெளிப்படும்இங்கிதத்தோற்றத்தாலும்நாயகியை மயக்கி மோஹிப்பவல்லவனைப் பன்மாயக் கள்வன் என்று சாற்ற எவ்விதத்திலு மமையும்.

விசேஷக்குறிப்பு:—இப்பிராட்டி கண்ணன் திருமுகத்தில் தாமரைத்தடங் கண்கள் ஒளிதிகழும் காந்தியி லகப்பட் அவனின் பாதாதிகேச பரியந்தமுள்ள எல்லா அவயவங்களையும் கண்ணாரப்பார்த்து மயங்கி மோஹித்துத் தன்ஊடலெல்லாம் இராக்கனவுபோல் மறந்தாளாயினும்தனக்குக் கண்ணன்கிட்டிய விலையில்லாப்பேற்றைத்தக்கபடிமதிக்கவில்லை. இவளின்ஊடல் நீடித்துநின்றதினால்அதன் வலிகுறைந்துஎவ்வாறுவது தலைசாய்ந்தொழியநிற்குமளவில் ஸ்ரீகிருஷ்ணனில் திவ்வியஸௌந்தரியம் ஒன்றே உணர்ப்பிக்கத்தகுமான உதவியாயிற்று. ஆனாலும் ஊடல்கள் தீர்க்க உதவும்உல்லாஸவிலாஸங்கள் இவளுக்கு வாய்க்கவில்லையென்று இப்பிராட்டியின் மனதில் நடையாடப்பெற்றகுறைவு மாறவில்லை போலும். ஏனெனில் அடுத்த பாசுரத்தில் இக்குறையை யல்லவோ 'நீநலிவுசெய்யவே ஆய்ச்சியராய் யாம் பிறந்துளோம்" என்று கூற்று.அடுத்ததுகாட்டும்பளிங்குபோல் நெஞ்சங்கடுத்ததுகாட்டும் முகம், இங்குப் பேச்சு. மேலும் மற்று ஒன்று கருத உளது. மானிடர்கள் ஆணானாலும் பெண்ணானாலும் சரி, நோவுபட்டு நலிவுற்றால் தன்னை யாதரித்துப் போற்றும் கேளிர் உசாவிக் குற்றேவல்செய்யவும் வேண்டுவனவற்றை உதவவும் நாடிபார்த்துச்சிகிச்சைசெய்யும் வைத்தியர்கள் வியாதிநிதான சாஸ்திரத்தால் பீடிக்கும் குற்றத்தைநாடித் தக்க சிகிச்சைசெய்து வியாதியஸ்தருக்கு ஏற்பக் கார்ப்பு கசப்பு ஔஷதங்களில்லாமல் இன்பமாய் உருசியுள்ள மருந்துகளாலேயேதேகத்தைத் தேற்றிச் சிலகாலம்சென்றுபோனாலும் வியாதி கிரமக்கிரமமாய்க்குணப்பட்டதாகில் அப்பிணி "பலருள்ளும்பாடு எய்தும்" நோயாளியும் கடவுளருளாலும் தம்பொறுமையாலும் வியாதி தீர்ந்தது என்ற மனோபாவத்தால் ஆற்றியிருப்பான். இங்ஙனன்றிக்கே ஒரு துணையுமின்றியிருக்க ஏதோ ஒரு நிபுணவைத்தியன் சில கடுவான மருந்தைக்கொடுத்துப் பத்தியம்வைத்து இரண்டொருநாளில் சுவஸ்தப்பட்டுவிட்டால் பிணிக்கு என்ன உளது பாராட்டப்படுவது? வைத்தியனோ வலிய கிரந்தங்களைநாடி வியாதிநிதானம் தெரிந்துகொள்ளவில்லை. இரண்டு மூன்று வைத்தியர்கள் கலந்து கூடித் தம்மில் செய்யவேண்டிய சிகிச்சையில் விவரப்படவில்லை. மாமலையிலுள்ள மூலிகை பிணி தீர்க்கவில்லை. பழக்கடைபச்சிலையே பிணிதீர்த்தது. இனி என்னகூற உளது!

Fancy two lovers making uptheir quarrels without The "billing and cooing" இதுநிற்க.

ஸ்வாபதேசம்:—8-ம்பாசுரத்தின்படி ஆழ்வாருக்குப் பகவான் தன்னருள் ஸூசகமாக அவருக்குப் பரமோத்திரசயமான திருவடிகளைக் காட்டவே, தம் மனக்கலக்கந்தெளிந்து பழையபடி போலவே சொஸ்தசித்தரானாரென்று சங்கதி; இப்பிராட்டியைப் போலவே ஆழ்வாருக்கும் பெறுங்குறை இவ்வண்ணம் தீர்ந்தாலும் உள்ளந்தரங்கத்தில் அவனின் கலவையில் உருசியும் சுவையும் ஒருவாறு குன்றியிருந்ததாக ஒருபடி ஊஹிக்கத் தோற்றுகிறது. இது கடைசி பாசுரத்தில் தெரியும். தான் யசோதைப்பிராட்டி வெண்ணெய் களவுக்காகப் பொடிய கோல்கொள்ள அழுது ஏங்கிப் பரிவினால் கோலாலடிக்கும் தண்டனையை மாற்றினால் தோப்புக்கரணம் இடக் கட்டளையிட மாயோன் அவ்வண்ணமே செய்தான். அதனைத் தேவநாட்டிய நர்த்தனம்போல் ரஸமாய்த் தாய் அனுபவித்தாள். இதை ஆழ்வாருக்குப் பகவான் அறிவு செய்விக்கக் காரணம் யாதென்னில், "யாம் சிசுவான அதிபாலியம் முதல் என்னைச் சேர்ந்தவர்களுக்கு அவரவர் கோலும் பணிவிடைசெய்பவ[illegible]ரு" என்று தெளிவு கொடுக்கும் நிமித்தம் யசோதைப்பிராட்டி வளர்த்த தாயும் பரமபக்தியுள்ளவளுமல்லவோ? அவளுக்கு அளித்த பிரஸாதம் மற்ற பாகவதர்களுக்கும் வாய்க்குமன்றோ?

---

10-ம் பாசுரம்.

நின்றிலங்கு முடியினை யிருபத்தோர்கா
லரசு களைகட்ட
வென்றிநீண் மழுவாய் வியன்ஞால
முன்படைத்தா
யின்றிவ் வாயர் குலத்தை வீடுய்யத்
தோன்றிய கருமா ணிக்கச்சுடர்
நின்றன்னா னலிவே படுவோ மென்று
மாய்ச்சி யோமே.

உரை:—வியன்-ஆச்சரியமான, ஞாலம்-ஜகத்தை, முன்படைத்தாய்-ஆதிகாலத்தில் புண்ணியபாப விபகமாய்க் கருதி ஜீவாத்மாக்களையும் ஜட வஸ்துக்களையும் சிருஷ்டி காலத்தில், உத்பவித்தவனே! (ஆழ்வார் திருவுள்ளம் - ஜகத்தைச் சிருஷ்டிப்பது-ஜீவாத்மாக்கள் தன்னைப் புண்ணியவசத்தாலணுகிப் பேணிப் பக்தர்களாகி மேன்மேல் நற்கதிக்கு வர இடமாய் உதவுதல் நிமித்தமென்று) இருபத்தோர்கால் - இருபத்தோர் தடவைகளில், அரசு - க்ஷத்திரய வம்சத்து ராஜாக்களை, களைகட்ட- அடியோடு மாய்த்த, வென்றி-ஜெயமுடைய, நீள் - நீண்ட, மழுவாய் - மழு என்னும் ஆயுதத்தை முன்பு பரசுராமாவதாரத்தில் உபயோகித்து உலகத்தைக் காப்பாற்றினவனே, இன்று - இக் கிருஷ்ணாவதாரத்தில், இவ் வாயர் குலத்தை - இடை ஜநங்களை, வீடுய்ய - புத்திர பௌத்திர களத்திர மித்திராதிகளுடன் நற்கதிக்கு எய்தும்படி, தோன்றிய - அவதரித்த, கருமாணிக்கச் சுடர்-நீல இரத்நம் போன்ற காந்தியுடையவனே, நின் தன்னால்-உன்னால், என்றும் - என்றும், நலிவேபடுவோம் -நீ எப்போதாவது ஒருக்கால் கலந்துரவலித்துப் பிறகு வெகுகாலஞ் சென்றாலும் எங்களோடு கலக்க மறந்து எங்களைத் துக்கபரம்பரைகளுக்கு உள்ளாக்கி வருத்தமடையப் பண்ணுகிறாய். பிரிவாற்றல் தரமில்லாத இடைப்பெண்களை எக்காலத்திலும் அடிக்கடியும் பிரிவின் கஷ்டமறியாத நீ விட்டுவிட்டு நலிவுசெய்கிறாய். அவர்களோ பிரிவாற்றாது படுவார்கள்.

குறிப்பு:—இப்பிராட்டி ஊடல் தீர்ந்தாள் என்னுஞ் செய்தி "வீடு உய்ய" அதாவது (தன்குல மகப்பட) ஒவ்வொரு ஆயர் குலமும் உய்ந்தார் என்று சொல்வதால் தெரியவருகிறது. "நலிவிபடுவோம் ஆய்ச்சியர்" என்று இவள் சொல்வது கண்ணனிடத்தில் குற்றம் நாட்ட எடுத்த பேச்சா, அல்லது எவ்விதம்? என்றால், ஒருவன் தான் பட்ட குறைகளைத் தன்னிடத்தில் அன்பு வாய்ந்த நெருங்கின பந்துக்களிடத்தில் சொல்லி நடந்துபோன வியஸநத்தை ஆற்றிக்கொள்கின்றபடி என்று கொள்ளவேண்டும். நலிவு செய்தவன் கண்ணனே, அந்நலிவால் துயர்பாடுபட்ட கோபிபிராட்டிக்கு ஆத்ம பந்துவும் இன்றியமையாத் துணையுமவனே!

---

11-ம் பாசுரம்.

ஆய்ச்சி யாகிய வன்னையா லன்று வெண்ணெய்
வார்த்தையுட் சீற்றமுண்டழு
கூத்த வப்பன் றன்னைக்
குருகூர்ச் சடகோப
னேத்திய தமிழ்மாலை யாயிரத்து
ளிவையோர்பத் திசையோடு
நாத்தனால் நவில வுரைப்பார்க்
கில்லை நல்குரவே.

பதக்குறிப்புக்கள்:—நல்குரவு-தாரித்திரியம்-ஏழைத்தனம். அதாவது இங்குப் பகவானை விட்டுப் பிரிந்துபடும் துக்கம், இசையோடு உரைப்பார்க்கில்லை = பதங்களின் அர்த்தத்தை அறியவேண்டா; வாயால் நல்ல ஸ்வரத்தில் அதாவது உச்சஸ்வரத்தில் உரைத்தாற் போதும். அது எவ்வண்ணம் பகவானுடன் கலவியை ஏற்படுத்துமென்றால், வைதீக மந்திரங்கள்போல் இந்தப் பத்துப்பாட்டுக்களும் உச்சரிப்பவர்களுக்குப் பகவானின் கலவியைக் கூட்டிவைக்குமென்று தாத்பரியம். வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழு கூத்தவப்பன் - சேரியில் வெண்ணெய் திருட்டுப்போயிற்று என்ற செய்தி வார்த்தையால் வெளியானவுடன், சீற்றமுண்டழு = தன்னை வளர்த்த தாயாகிய யசோதை பிராட்டி பொடிவாளென்று பயத்தினால் அவள் அவனை வினவத் தொடங்குமுன்னரே அழுது கலங்குகின்ற, கூத்தவப்பன் = தான் முன்கூட்டியே அழுதநிமித்தம் யசோதைபிராட்டி மனம் இரங்கிக் கோல்கொண்டு அடிக்கும் தண்டனையை மாற்றித் தோப்புக் கரணம் இடும்படி கட்டளையிட அந்த விதியை அனுஸரித்துக் கண்ணன் கூத்தாடினான். இது நாட்டிய நர்த்தன பழக்கமுள்ளவர்கள் ரஸமாய் ஆடி நடிக்கும் கூத்துப்போல் கண்டவர் மனத்தைக் கவர்ந்துகொண்டதாக அருளிச்செய்கிறார்.—

ஆயச்சியாகிய அன்னை கண்ணனைப் பெற்றெடுத்த தாய் வேறிருக்க வளர்க்கும்தாய் யசோதைப்பிராட்டி.

பொழிப்புரை:—"அதி ஸ்நேஹியான யசோதைப் பிராட்டி "வெண்ணெய் களவு கண்டாய்" என்று பொடிந்ததுபோலே ஆழ்வார் தம் பிரணய கோபத்தாலே "எம்பெருமானோடு கலப்பே னல்லேன்" என்றகல அது பொறுக்கமாட்டாதே தளர்ந்த தளர்ச்சியை யனுஸந்தித்து இனியராய் அவ் வெம்பெருமானை ஏத்திய வித் திருவாய்மொழியை யீந்த மனோ

பாவம் இல்லாதவர்களாய்ச் சொன்னார்களானாலும் எம்பெருமான் எப்போதும் அடுத்திருக்கச் செய்தேயும் அவனைப் பார்க்கமாட்டேனென்ற மனக் கலக்கமில்லாமல் ஆழ்வார் தாம்பட்ட துக்கம்படவேண்டாவென்கிறார்.

விசேஷக் குறிப்பு:—I. சென்ற பாசுரத்தில் கோபிபிராட்டியின் விண்ணப்ப ரூபமாய் ஆழ்வார் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பிரிய நாயகிகள் பக்தர்கள் இவர்களை விட்டு நெடுங்காலம் பிரியவொண்ணாதென்றும் அவர்கள் பிரிவாற்ற வல்லவர்கள் அல்லரென்றும் விநயபூர்வமாய்த் தெரிவித்தார்.

II. இப்பாசுரத்தில் எம்பெருமான் கலக்க வந்தாலும் தாம் அவனோடு கலப்பேனல்லேனென்று பிடிவாதம் செய்தது தப்பிதமென்றும் செய்யவொண்ணாத பிழையைத்தாம் இயற்றியதினால் பகவான் திருவுள்ளம் கலங்கி "ஐயோ! இவரா நம்மை விட்டுவிடுவதென்று மேல்விழுந்து மிகவும் மனம் இரங்கினராய்க் கிருஷ்ணாவதாரத்தில் சிறு குழவியாக இருக்கையிலேயே தன் தாயின் உற்சாகநிமித்தம் தோப்புகரண முதலிய கூத்தாடியதை அவன் மனதிற்குத் தோற்றுவித்து அதினின் கலக்கத்தை மாற்றுவித்தான். இவனின் சேவடியைக் கண்டு முன்பேயே (4-ம்பாசுரம்) அதிகப்பிரீதி அடைந்த ஆழ்வார் மனந்தெளிந்து சாந்தியடைந்து தம்மைப்போல் மனக்கலக்கம் ஒருவருக்கும் வேண்டா வென்று இரண்டு புத்திமதிகளை அருளிச்செய்கிறார்.

I பக்தர்கள் பகவானின் துணை வேண்டாவென்றாலும், வேண்டாவென்று சாகஸம்செய்தாலும் அவன் துணைநிற்காமல் ஒழியான். அன்னவன் "ஈசுவர ஸர்வபூதானாம் ஹிர்த்தேச அர்ச்சுன திஷ்டதி" என்று பகவான் பகவத்கீதையில் பணித்தவண்ணம் எல்லாப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் எப்போதும் ஸந்நிஹிதனாயிருப்பதுமாத்திர மன்றியும், "பிரியோஸிமே" "நீ எனக்கு வெகுப் பிரிய னென்று" எடுத்துரைக்கக் கூடிய பக்தர்களாகிய ஆழ்வார் முதலியவர்களை ஒருக்கணமும் விட்டகலான். இத்தத்துவம் தாம் மறந்த இழவை ஆழ்வார் அநுஸந்தித்து என்ன மூடத்தனம் கொண்டு அபசாரப்பட்டேன் ; இருட்டில் ஒற்றையடிப்பாதையில் வெளிச்சமில்லாமல் கும்பலாய்ச்செல்பவர் முன்போகிறவன் இடறிவிழுந்தால் பின் போகிறவனுக்கு விளக்குக் காட்டியதுபோல் ஆழ்வார் தாமிரண்டு மிரண்டு வழிதப்பிப் பிழை இயற்றிய நிமித்தம் கண்டு தம்போலிகளான பக்தர்கள் இவ்வண்ணம் அபசாரப்பட வேண்டா, தாம் பட்ட துயர்பாட்டிலிருந்து நீங்கள் தப்பிப் பிழைத்து உய்யுங்கோளென்று இதர பக்தர்களுக்கு அருள்புரிந்து பாடம் கற்பிக்கிறார். அவதாரிகையிலே பகவான் பக்தர்களுக்குத் தாழ்ந்து மேல்விழுந்து கலந்து ரஸிப்பானென்று இப்பத்துக்குத் தாத்பரியம் சொல்லியாயிற்று.

விசேஷக் குறிப்பு:—உலகத்தில் எல்லா வகை நற்குணங்களிலும் தாழ்ந்தவர்க்குத்தக்க அருள்புரிவதேபரமோத்தமமான குணம். இது நம்மாழ்வார் பாசுரத்தில் இங்கும் அங்கும் எங்கும் பசு கன்றுக்குப் பால் சுரப்பதுபோல் மிகுந்து உலகத்தாரை நல்வழிக்கு உய்த்துக் காப்பதைக் காணலாம். இதுகொண்டே அவர் பிரதம சீடரும் ஆஸூயை இல்லாத பிராம்மணோத்தமருமான மதுரகவிகள் தாம் திருவாய்மொழி ஓதியும் குருவிடத்தில் பாடம் கேட்டும் தெளிந்து அந்தத் தமிழ் வேதத்தை உலகருக்கு அளித்ததை "உலகின் அருள்மிக்கதே" என்று நம்மாழ்வார் குணாதிசயத்தை அருளிச்செய்தார்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்—30. வியாகரணம்

[876-வது பக்கத் தொடர்ச்சி]

(5) ஆய்த வெழுத்தும் சந்தச்சீரும்

நமது சமயகுரவர் பாடல்களில் ஆய்தவெழுத்து பெரும்பான்மையில் உபயோகப்படவில்லை. ஏனெனில், அது அமுதவெழுத் தன்றாகலின், அதற்குத் தக்க விடங்களிலேயே பயன்பட லாயிற்று. அவை மிகவும் சில. அங்குள்ள சீர்களில் இவ்வெழுத்து, மெய்யெழுத்தைப்போல் நின்றதா, அல்லது ஒலியற்றதுபோல் நின்றதா வென்பது சில உதாரணங்களைக் கொண்டு ஆராய்வோம். முன்சொன்ன இரண்டு பதிகங்களிலும் ஆய்தவெழுத்து உள்ள செய்யுள்க ளுள. அவை பின்வருமாறு:—

நேருமவர்க்குணரப் புக லில்லைநெடுஞ்சடை
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேருமவர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடல் தடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர்-நாக ழஃகுறவ் [லலங்கல்
வெழுஃ கெழும் மலர் கொள்பொன் னிதழிநல்
தாரம வர்க்கிமவான் மகள் ஊர்வது போர்விடை
கடி படு செடி பொழில் தருமபுரம் பதியே
சம்பந்தர் - யாழ்முரி - 5

இங்கு 4-வது அடியில் வரும் ஆய்தம் "வெழுஃ" என்பதில் நிரையசை அந்தமாதலின், அது இருப்பதும் இல்லாததும் இசையில் ஒன்றேயாம். மூன்றாவது அடியின் கடைச்சீரான "ழஃகுறவ்" என்பது புளிமா வருமிடமாதலால் ஆய்தம் ஒலிக்காது, அச்சீர் புளிமாபோ லொலிக்கும். ஆயினும் சங்கத்தார் காலக் கவிகளில் அவ்வாறு நீக்கவில்லையென்பது சம்பந்தர் அபிப்பிராயமென்பதுபோல், அவர்பாடிய ஒரு கட்டளைக் கலித்துறையால் அநுமானிக்கலாம்:—

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது
முந்தைக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுது நாமறியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்

என்னும் திருப்பாசுரத்தில் "மஃதறிவீர்" என்னுஞ் சீர் கட்டளைக் கலித்துறையின் 5-ம் சீராதலால் "விளங்காய்ச்" சீராகவேண்டும். இங்கு "மஃ" என்பதை ஒரு நேரசையாகக் கொள்வோமாயின், அச்சீர், கூவிளங்காய்ச் சீராய் நிற்கும். இதை நோக்குமிடத்து ஆளுடைய பிள்ளையார் ஆய்தவெழுத்தை வெண்பா போன்ற பாக்களில் பழைய வழக்கத்திலும் (In

the orthodox fashion) சந்த விருத்தங்களில் இசைக்குத் தக்கவாறும் பயன்படுத்தினரென்பது திண்ணம். அதுவும் அப்பர்கால வழக்கமே. பண்டைய வழக்கத்திற்கும் முரணென்று கூறலாகாது. "அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே" என்னும் தொல்காப்பியனார் சூத்திரத்திற்குப் பேராசிரியர் உரையில் "மாத்திரை முதலியவற்றை உறுப்புக்களான் இத்துணை அசையுஞ் சீரும் தொடையுங் கொண்டது செய்யுளென்றானும், அளவியல் கூறியஉறுப்புக்களால் வரையறுக்கப்படா" என்பர். செய்யுளியல் முதற்சூத்திரம் கூறியவாறு.

மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ
யாத்த சீரே யடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை யெனாஅ
நோக்கே பாவே யளவிய லெனாஅத்
திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக்
கேட்டோர் களனே காலவகை யெனாஅக்
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ
முன்னம் பொருளே துறைவகை யெனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையி
னாறு தலையிட்ட வந்நா லைந்து
மம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனாஅப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே

என்றதுபோல் விருத்தங்களையும் நமது நல்லிசைப் புலவர் வகுத்துரைத்தனர்.

30 வியாகரணம்—முற்றிற்று

189174

# தமிழ்ப்பாடம் 100.

## அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம்

[873-வது பக்கத் தொடர்ச்சி]

குருகுறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
கொடியிருண்ட ஞாழலே நெடியகண்ட னிழலே
பொருதரங்க வேலையே நிருதரங்க மாலையே
போதயின்ற கம்புளே யேதையின் றியம்புகேன்
திருவரங்க ரிணையிலா வொருபுயங்க வணையிலே
திகழ்வலக்கை கீழதாமுகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமு மருணவிம்ப வதரமுங்
காவிகொண்ட மேனியு மாவிகொண்டு போனவே.

கருத்து:—திருவரங்கரைப் பிரிந்திருக்க ஆற்றுதவோர் தலைவி கடற்கரைசென்று அங்குள்ளனவற்றைக் கூப்பிட்டுத் தன் கருத்தைக் கவர்ந்த அரங்காது அவயவங்களைச்சொல்லி இரங்குவாள்போல் கவி தன் மனதைத் தெரிவிக்கின்றார்.

பதவுரை.

குருகு - நாரைகள், உறங்கு - தங்கிஉறங்குகின்ற, கானலே - கடற்கரைச் சோலையே! கரு - கருமையான, நிறம் - நிறத்தை, கொள் - கொண்ட, பானலே- குவளையே! கொடி-(தன்னைச்சுற்றிப் படர்ந்திருக்கிற) கொடிகளால், இருண்ட - இருண்டிருக்கின்ற, ஞாழலே-குங்குமமரமே! நெடிய-நீண்ட, கண்டல்-தாழையின், நிழலே-நிழலே! பொரு-மோதுகின்ற, தரங்கம்-அலைகளையுடைய, வேலையே - கடலே! நிருதர் - இராக்ஷஸர்களுடைய, அங்கம் - சரீரம்போன்ற, மாலையே - மாலைக்காலமே! போது - மலர்களை, அயின்ற - தின்றிருக்கின்ற, கம்புளே - சம்பங்கோழியே!— இன்று - இப்பொழுது, ஏதை - எதைத்தான், இயம்புகேன் - சொல்லப்போகிறேன்—

திரு - அழகிய, அரங்கர் - அரங்கநாதர், இணை - தனக்குச் சமானம், இலா - இல்லாத, ஒரு - ஒரு, புயங்கம் - பாம்பாகிய, அணையில் - படுக்கையில், திகழ் - விளங்குகின்ற, வலக்கை - தனது வலது கையை, கீழது ஆ - (தலையின்) கீழாக வைத்துக் கொண்டு, முகிழ் - குவிந்திருக்கின்ற, மலர் - தாமரைபோன்ற, கண் - கண்கள், வளர்வது - துயில்கின்ற, ஓர் - ஒப்பற்ற, கருணை - அருளானது, நம்பு- இவருக்கு உண்டென்று நம்பிக்கை விளைவிக்கும், வதனமும் - முகமும், அருண - சிவந்த, விம்ப - கோவைப்பழம் போன்ற, அதரமும் - உதடுகளும்; காவி கொண்ட - குவளைமலர்போன்ற, மேனியும்— அவரது நிறமும்; ஆவி - (எனது) ஆவியை, கொண்டு போனவே - கவர்ந்துகொண்டு போய்விட்டனவே!

---

வாழுமவுலித்துழாய்மணமுமகரக்குழைதோய்விழியருளு
மலர்ந்தபவளத்திருநகையுமார்பிலணிந்தமணிச்சுடருந்
தாழுமுளரித்திருநாபித்தடத்துளடங்குமனைத்துயிருஞ்
சரணகமலத்துமைகேள்வன்சடையிற்புனலுங்காணேனு
லாழமுடையகருங்கடலினகடுகிழியச்சுழித்தோடி
யலைக்குங்குடகாவிரிநாப்பணைவாயரவிற்றுயிலமுதை
யேழுபிறப்பிலடியவரையெழுதாப்பெரியபெருமானை
எழுதவரியபெருமானென்றெண்ணுதெழுதியிருந்தேனே

பதவுரை.

வாழும் - யாவரையும் வாழ்வித்துத் தானும் வாழ்கின்ற, மவுலி - முடியில் சூடிய, துழாய் - துளசியினது, மணமும் - வாசனையும்; மகரக் குழை - (காதிலணிந்த) மகரகுண்டலங்களில், தோய் - போய்த் தீண்டுகின்ற, விழி - கண்களின், அருளும் - கருணையும்; மலர்ந்த - மலர்ந்திருக்கின்ற, பவளம் - பவளம்போன்ற வாயில், திரு - அழகிய, நகையும் - சிரிப்பும்; மார்பில் - மார்பில், அணிந்த - அணிந்த, மணி - கௌஸ்துபரத்தினத்தின், சுடரும்- ஒளியும்; தாழும்-ஆழ்ந்த, முளரி - தாமரைபோன்ற, திரு - அழகிய, நாபித்தடத்துள் - நாபியினிடத்தில், அடங்கும் - அடங்கியிருக்கின்ற, அனைத்து-எல்லா, உயிரும் - சீவராசிகளையும்; சரண கமலத்து - பாதத் தாமரையில், உமை - பார்வதிக்கு, கேள்வன்-நாயகனாகிய சிவபிரானது, சடையில் - சடையில் தங்கும், புனலும் - கங்கை நீரையும், காணேன் - நான்இச்சித்திரத்தில் காணவில்லை.—ஆகையால்,

ஆழம் உடைய - ஆழமான, கரும் கடலின் - கரிய கடலின், அகடு - வயிறானது, கிழிய - கிழியும்படி, சுழித்து - சுழித்துக் கொண்டு, ஓடி - ஓடி, அலைக்கும் - அலைக்கின்ற, குடகாவிரி - மேலைக்காவேரியின், நாப்பண் - நடுவில் (உள்ள அரங்கத்தில்), ஐ - ஐந்து, வாய் - வாய்களையுடைய, அரவில் - பாம்பின்மீது, துயில் - நித்திரை செய்கின்ற, அமுதை -*அமிர்தம் போன்றவனும், அடியவரை - தனது பக்தர்களை,

ஏழு - ஏழுவகையான், பிறப்பில் - பிறவிகளில், எழுதா - சேர்க்காத, பெரிய பெருமானை-பெருந்தன்மையுடைய பெருமானும் ஆகிய அரங்கனை,

எழுத - சித்திரத்தில் எழுத, அரிய - முடியாத, பெருமான் - பெருமான், என்று - என்று, எண்ணு து - உணராமல், எழுதி - வீணாக எழுதி, இருந்தேனே - கிடக்கின்றேனே.

---

வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள் பேதை யாவியோட வீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனாயி ரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே. 15

கருத்து:—"வாணாசுரனை வென்று அவனது மகள் உஷையைப் பிரத்யும்நனுக்கு மணஞ்செய்வித்த அரங்கா, உன்மேல் காதல்கொண்டு வருந்தும் இவளை நீ கண்ணெடுத்தும் பார்க்காமலிருத்தல் நீதியோ" என்று தோழிமார் மெல்லென ஏசுகின்றார்.

பதவுரை.

(வாணாசுரனுக்குத்துணையாய்ப் போர்செய்யவந்த) மோடி - துர்க்கை, ஓட-ஓடவும்; அங்கி - (சிவபிரான் ஏந்திய) மழு, வெப்பு-தனது வெப்பம், மங்கி ஓட - (உன்னைக்கண்ட பயத்தால்) மங்கிப்போகவும்; ஐங்கரன் - ஐந்து கரங்களையுடைய விநாயகன், முடுகி - விரைந்து, ஓட - ஓடவும்; முருகன் - முருகன், ஓட-ஓடவும்; முக்கண் - மூன்று கண்களையுடைய, ஈசன் - பரமசிவன், மக்களை - தன்னுடைய மைந்தர்களை, தேடி - தேடிக்கொண்டு, ஓட - ஓடவும்; வாணன் - வாணாசுரனது, ஆயிரம் - ஆயிரம், புயங்கள் - தோள்கள், குருதிநீர் - இரத்தம், சிந்தி ஓட - சொரிந்து பெருகும்படி, நேமி-சக்ராயுதத்தை, தொட்ட-ஏவிய, திருஅரங்க ராசரே - திருவரங்க நாதரே,

வனசம் - தாமரை, அன்ன - போன்ற, இருகண்-இரண்டு கண்களும், வாடி ஓட - வாடிப்போகவும்; வெள்ளம் - (அதனிலிருந்து பாய்கின்ற) நீர், அருவி போல் - அருவியைப்போல், மருவி ஓட - வழிந்து ஓடவும்; வாடை - வாடைக்காற்றானது, ஊடு - இடையே, ஆடி - அடித்து, ஓட - செல்லவும்; அன்றில் - அன்றிலினது, ஓசை - குரல், செவியில் - அவளது காதில், ஓட - புகவும், (வருந்துகின்ற) எங்கள் பேதை - எமது பேதையாகிய இவளது, ஆவி - உயிரானது, வள் - வளப்பம் உடைய, துழாய் - துளசியை உன்னிடம் பெறவேண்டும் என்ற, ஆசையோடு - ஆசையுடனே, (அது நிறைவேறாமல்) ஓடல்-நீங்கிவிடும்படி நீ சும்மா இருத்தல், நீதியோ - உனக்குத் தர்மமாகுமா!

---

## இலக்கணம்

நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் ட், ற், என்று மெய்களின்மேலேறியிருக்க, வருமொழி முதல் உயிரோடு புணருங்கால், அக் குற்றியலுகரம் போய்விடுவதும் அல்லாமல் அது ஏறியிருந்த மெய் இரட்டி வருமொழிமுதல் உயிரை ஏற்றுக்கொள்வதும் ஆகலாம் என்பதைச் சென்றவாரம் சொன்னோம். இவ்வாறு மெய் எப்பொழுது இரட்டும், எப்பொழுது இரட்டாது என்பதை நிலைமொழியும் வருமொழியும் என்ன தொடரில் அமைந்திருக்கின்றன என்பதை நோக்கி உணரவேண்டும்.

I ஐ, ஆல், ஆன், ஒடு ஓடு, இல் இன், முதலிய வேற்றுமை உருபுகளோடு சேரும்போது, ட், ற், மெய்கள் பெரும்பாலும் இரட்டும்:—

மாடு + ஐ = மாட்டை; குவடு + ஒடு = குவட்டொடு; சேறு + ஆல் = சேற்றால்; வயிறு + இல் = வயிற்றில்.

II பண்புத் தொகைகளில் இரட்டும்.—

காடு + அரண் = (காடாகிய அரண்) = காட்டரண்
குருடு + ஆனை = குருட்டானை; ஏறு + ஏனம் = ஏற்றேனம். வயிறு + உறுப்பு = வயிற்றுறுப்பு. புனிறு + ஆ = புனிற்றா. (புதியதாய் ஈன்றதாகிய பசு)

III உருபும் பயனும் உடன் தொக்க வேற்றுமைத் தொகைகளில் இரட்டும்:—

காடு + ஆனை (காட்டில் வசிக்கும் ஆனை, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை) = காட்டானை.

நாடு + அரசன் (நாட்டை ஆளும் அரசன்—2ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை) = நாட்டரசன்.

கயிறு + ஏணி (கயிற்றால் செய்த ஏணி—3ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை) = கயிற்றேணி.

IV ஆறாம் வேற்றுமைத் தொகையில்இரட்டும்:—

உதடு + ஆட்டம் = உதட்டாட்டம்
மாடு + அடி = மாட்டடி
ஆறு + அலை = ஆற்றலை
ஞாயிறு + ஒளி = ஞாயிற்றொளி

மேற் சொன்ன இந்நான்கு இடங்களில்தான் ட், ற் என்னும் மெய்கள் இரட்டக் காண்கின்றோம். மற்றத் தொடர்களில் அவை பெரும்பான்மை இரட்டுவதில்லை:—

வீடு + இல்லை = வீடில்லை. (எழுவாய்த் தொடர்)
மாடு + ஓட்டினான். மாடோட்டினான் (2ம் வேற்றுமைத் தொகை)
முகடு + ஏறினான் = முகடேறினான் (7ம் வேற்றுமைத் தொகை)
ஓடு + என்றான் = ஓடென்றான் (வினை முற்றுத் தொடர்)
பிளிறு + ஆனை = பிளிறானை (வினைத்தொகை)

முன் சொன்ன விதிகள் நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திற்கும் மாத்திரந்தான் பொருந்தும்; அதுவும் அவை நெடிற்றொடர் உயிர்த்தொடர்களாய் இருப்பது மாத்திரமல்லாமல், ட் என்ற மெய்யிலாவது ற் என்ற மெய்யிலாவது ஏறியிருக்கவும் வேண்டும். ஆதலின்,

படகு + ஓட்டம் = படகோட்டம் என்று ஆகுமேயல்லாது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாயிருந்தாலும், ஆறும்வேற்றுமைத் தொகையிலும், படக்கோட்டம் என்றாகாது.

காது + அணி = காதணி, என்றாகுமே அல்லாது, நெடிற்றொடராயிருந்தாலும், 7ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும், காத்தணி என ஆகாது.

எனினும், எருது + அடி = எருத்தடி, எனத் தகர மெய் இரட்டிப் புணர்வதும் உண்டு.

இனி, மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழிமுதல் உயிரோடு எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

அவை பெரும்பான்மை, பந்து + அடித்தான் = பந்தடித்தான், வண்டு + ஈட்டம் = வண்டீட்டம், சங்கு + ஊதினன் = சங்கூதினன், என்பனபோல், குற்றியலுகரம் மெய்யைவிட்டு ஓடிவிட அந்த மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறிக்கொள்வதே முறை. எனினும் சிறுபான்மை, குற்றியலுகரம்போய் அந்த மெய்யின்மேல் வருமொழிஉயிர்வந்து ஏறுவதல்லாமல், அந்தக் குற்றியலுகரம் இருந்த மெய்க்குப் பக்கத்திலுள்ள மெல்லினமெய் தனக்கு இனமான வல்லினமெய்யாகத் திரிவதும் உண்டு:—

இரும்பு + ஆணி = இரும்ப்உ + ஆணி = இரும்ப் + ஆணி = இருப்ப் + ஆணி = இருப்பாணி.

வேம்பு + இலை = வேப்பிலை.

குரங்கு + ஆட்டம் = குரக்காட்டம்.

கன்று + ஆ = (கன்றை உடைய பசு) = கற்றா.

என்பு + உடம்பு = எற்புடம்பு.

இவ்வாறு, ஈற்றுக்கு அயலிலிருக்கும் மெல்லின மெய் அதற்கு இனமான வல்லினமெய்யாகத்திரிவது வேற்றுமைத் தொகையிலும், அல்வழியிலும் காணலாம். எனினும், மேற்காட்டிய உதாரணங்களிற்போல் திரிவன சிறுபான்மையே. பெரும்பான்மை திரிவதில்லை.

அஷ்ட பிரபந்தம் முற்றிற்று.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 11. சவரி பிறப்பு நீங்கு படலம்.

[882-வது பக்கத் தொடர்ச்சி]

புண்ணிய முருகிய போய்கையே காத்தது.

தனுவெனும் பண்டை நாமத்தக் கவந்தன் காட்டிய நெறியிற்சென்ற இராமன் இளையகோவுடன் மதங்கனது இருக்கை சேர்ந்தான். அது,

கண்ணிய தருதற் கொத்த கற்பகத் தருவு மென்ன
உண்ணிய நல்குஞ் செல்வ முறுநறுஞ் சோலை ஞால
மெண்ணிய வின்ப மன்றித் துன்பங்க ளில்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கமே போன்ற
[தன்றே

[நினைத்தவைகளைக் கொடுக்கின்ற கற்பகத்தரு என்னும்படி, உண்பதற்குக் கொடுக்கின்ற கனிகளாகிய செல்வம் பொருந்திய வாசனை பொருந்திய சோலையானது, உலகத்தவர் எப்பொழுதும் எண்ணியிருக்கிற இன்பமேயன்றித் துன்பம் அற்றதாய், புண்ணியம்செய்தவர் சென்று சேர்கின்ற சுவர்க்கத்தையே ஒத்திருந்தது]

அன்னதா மிருக்கை நண்ணி
யாண்டுநின் றளவில் காலம்
தன்னையே நினைத்து நோற்குஞ்
சவரியைத் தலைப்பட் டன்னாட்
கின்னுரை யருளித் தீதின்
றிருந்தனை போலு மென்றான்
முன்னிவர்க் கிதுவென் றெண்ண
லாவதோர் மூல மில்லான்

[இவனுக்கு முன் இது மூலகாரணமாயிருந்தது என்று எண்ணக்கூடியது ஒன்று இல்லாதவனாகிய ஆதிமூலமாகிய இராமபிரான், அத்தகைய மதங்காச்சிரமத்தைச் சேர்ந்து, அங்கு இருந்துகொண்டு நெடுங்காலமாகத் தன்னையே கருதித் தவம்செய்கின்ற சவரியைச் சந்தித்து, இனிய வார்த்தைகளைக் கூறி, நீ யாதும் துன்பமின்றி இருக்கின்றாயா—என்று கேட்டான்]

கவந்தன்பால்சென்ற அளவுகூடக்கம்பர் தம்கருத்தினைச் சவரியின்பால் செலுத்தக் காண்கிலம். செய்யுள்கள் சோர்ந்து நடக்கின்றன. கம்பர், தன்னையே சிறிது தட்டி எழுப்பிக்கொண்டு, 'முன்னிவற் கிதுவென் றெண்ண லாவதோர் மூலமில்லான்' என்ன ஈற்றடியைச் சற்றே எடுத்துவைக்க முயல்கின்றாயினும், அதுவும், ஏனைய பெரிய பெரிய புராணங்களின் சிறிய வீச்சிற்குமேல் செல்லமாட்டேன்என்கின்றது. சவரியும் நோற்று நோற்றுச் சோர்ந்திருக்கின்றனள்

ஆண்டவ ளன்பி னேத்தி யழுதிழி யருவிக் கண்ணள்
மாண்டதென் மாயப்பாசம் வந்தது வரம்பில்காலம்
பூண்டமாதவத்தின் செல்வம் போயது பிறவியென்பாள்
வேண்டியகொணர்ந்து நல்கவிருந்துசெய்திருந்த வேலை.

[அப்பொழுது அவள் அன்போடு துதித்து, ஆனந்தத்தால் அழுது வழிகின்ற அருவி பெருகுகின்ற கண்களையுடையவளாய், என் மாயப் பாசம் நீங்கியது, அளவற்ற காலம் நான் செய்த பெரிய தவத்தின் பயன் கைகூடியது, என் பிறப்பு ஒழிந்தது, என்று, வேண்டிய கனிகளைக் கொணர்ந்து கொடுக்க, அவர் விருந்துசெய்திருந்தபோது]

ஈசனுங் கமலத் தோனு மிமையவர் யாரு மெந்தை
வாசவன் றானு மீண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி
ஆசறு தவத்திற் கெல்லை யணுகிய திராமற் காய
பூசனை விரும்பி யெம்பாற் போதுதி யென்றுபோனார்.

[சிவனும், பிரமனும், எல்லாத் தேவர்களும், எந்தையே, இந்திரனும், இங்கு வந்து மகிழ்ந்து பார்த்து, "உனது குற்றமற்ற தவத்திற்கு எல்லை வந்துவிட்டது, இராமனுக்கு உரிய பூசனைகளை விரும்பிச் செய்து எங்களிடத்திற்கு வருவாயாக," என்று சொல்லிப் போனார்.]

இருந்தன னெந்தை நீயீண்
டெய்திய தென்னுந் தன்மை
பொருந்திட வின்று தானென்
புண்ணியம் பூத்த தென்ன
அருந்தவத் தரசி தன்னை
யன்புற நோக்கி நாங்கள்
வருந்துறு துயரந் தீர்த்தா
யம்மனை வாழி யென்றான்.

[எந்தையே, இங்கு இருந்தேன். நீ இங்கு வருவாய் என்ற அது நேர்ந்த இன்றுதான் என்னுடைய புண்ணியம் பலித்தது, என்று துதிக்க, இராமன், அரிய தவத்திற்கு அரசி போன்ற அவளை அன்போடு பார்த்து, தாயே, நாங்கள் வருந்திய துயரத்தைத் தீர்த்தாய், நீ வாழ்வாயாக—என்றான்.]

ஈசனே முதல் வாசவன் ஈறாக வந்து சவரியைத் தம் உலகிற்கு அழைத்த இது முதனூலில் இல்லாத செய்தி. இதன் பின்னர்,

அனகனு மிளைய கோவு மன்றவ ணுறைந்த பின்றை
வினையறு நோன்பி னாரு மெய்ம்மையி னோக்கி வெய்ய

துணைபரித்தேரோன் மைந்தனிருந்தவத் துளக்கில்குன்ற
நினைவரி தாயற்கொத்தநெறியெலா நினைந்துசொன்னாள்

[குற்றமற்றவனாகிய இராமனும், அவன் தம்பியாகிய இலக்குமணனும், அன்று அங்குத் தங்கிப் பிறகு, வினைகள் அற்ற தவத்தையுடைய சவரியும், அவர்களை மெய்யுறப் பார்த்து, வெப்பமுடையவனும் வேகமாகச் செல்லும் குதிரைகளைக் கட்டிய தேரையுடையவனும் ஆகிய சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன் இருந்த அந்த ருசியமுக மலையினது நினைப்பதற்கு அரியதாவதற்குரிய வழி முழுவதையும் நினைத்துக் கூறினாள்.]

வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறு மறிஞ ரென்ன வன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனனென்ப மன்னோ கேள்வியாற் செவிகள்முற்றும்
தோட்டவருணர்வினுண் ணுமமுதத்தின்சுவையாய் நின்றான்

[கேள்வியால் தம் காதுகள்முழுவதும் தோண்டபெற்ற பெரியோர், தம் உணர்வினால் நுகர்கின்ற அமிர்தத்தின் உள்ளே இருக்கின்ற சுவையாய் அமைந்த இராமபிரான், முத்திக்கு உரிய உண்மையான வழியை வெளிப்படையாகக் காட்டுகின்ற ஞானிகளைப்போல அந்தச் சபரி கூறியவைகளைக் கேட்டான்.]

பின்னவளுழன் றுபெற்றயோகத்தின் பெற்றியாலே
தன்னுடறுறந்துதானத் தனிமையினினிதுசார்ந்தா
ளன்னது கண்ட வீர ரதிசய மளவின் றெய்திப்
பொன்னடிக் கழல்க ளார்ப்பப் புகன்றமா நெறியிற் [போனார்

[அதன்பின், அவள், வருந்திப்பெற்ற யோகத்தின் தன்மையாலே தன் உடம்பை விட்டு ஒப்பற்ற முத்தியை இனிது அடைந்தாள். அதனைக்கண்ட வீரர் அளவில்லாத அதிசயம் அடைந்து, தம் அழகிய கால்களில் வீரக்கழல்கள் ஒலிக்க, அவள் சொன்ன பெரிய காட்டுவழியிற்சென்றார்.]

தண்ணெனுங் கானுங் குன்றுந்
திசைகளுந் தவிரப் போனார்
மண்ணிடை வைக றோறும்
வரம்பிலா மாக்க ளாடக்
கண்ணிய வினைக ளென்னுங்
கட்டழல் கதுவ லாலே
புண்ணிய முருகிற் றன்ன
பம்பையாம் பொய்கை புக்கார்

[குளிர்ந்த காடும் மலையும் திசைகளும் கடந்துபோனார். நாள்தோறும் பூமியிலுள்ள கணக்கில்லாத மனிதர் வந்து நீராடுவதால், அவர்களிடத்துள்ள மிகுந்த தீவினை என்னும் பெருந் தீ படுவதால், புண்ணியம் என்பது உருகிக் கிடப்பதுபோல் தோன்றுகின்றபம்பைஎன்னும் பொய்கையைச் சேர்ந்தார்.]

“புண்ணியம் உருகிற்றன்ன பொய்கை” என்ற அவ்வீற்று முத்திரையினாற்றான் இப்படலம் கம்பரால் பாடப்பெற்றதென்று கொள்வதாயின் கொள்ள இயலும். இச் சவரியின் சரித்திரம் வான்மீகர் நூலில் சற்றே விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது:—

இராஜ குமாரர்களான இராமலக்ஷ்மணர்கள் பம்பாசரசிற்குப் போவதென்று கவந்தன் காட்டின வழியாகச் சென்று மேற்குநோக்கிப் போனார்கள். சுக்கிரீவனைக் காணவேண்டி வழிக்கொண்டு செல்லும்பொழுது அவர்கள் மலைகளினுச்சியில் பூக்கள் நிறைந்தனவும் தேன்போன்ற கனிகள் மலிந்தனவுமான அநேக மரங்களைக் கண்டார்கள். அவர்கள் அன்றிரவை ஒரு மலையின் உச்சியில் கழித்து மறுநாள் பம்பையின் மேற்குக்கரை சென்றுசேர்ந்து வரியினுடைய அழகிய ஆசிரமத்தைக் கண்ணுற்றார்கள். அவர்கள் நான்குபுறத்தும் மரங்கள் சூழ்ந்து அழகாக விளங்கும் அவ்வாச்சிரமத்துள் நுழைந்து சுற்றிப் பார்த்துத் தவமூதாட்டியாகிய சவரியைக் கண்டார்கள். முற்றத் துறந்த அந்தத் தவமூதாட்டி இராமலக்ஷ்மணர்களைக் கண்டவுடன் எழுந்து கைகூப்பி அவர்களுடைய தாள்களில் வணங்கி அவர்களுக்கு முறைப்படி பாத்திய ஆசமனீயங்களைவழங்கினாள். இராமர் தரும நெறியில் நின்ற அத்தவமூதாட்டியை நோக்கி, “பணிமொழி, தவத்துக்கு இடையூறுகளாக உள்ளவைகளெல்லாவற்றையும் நீ ஒழித்து விட்டாயா! நினது தவம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றதா? நீ கோபத்தை நீக்கி உணவைச் சுருக்கிக் கொண்டாயா? செய்யவேண்டிய நோன்புகளைத்துஞ் செய்தாயா? மனோசுகம் அடைந்தாயா? நீ நின் ஆசாரியருக்குச் செய்த தொண்டு பயனடைந்ததா?” என்று வினாவினார். இராமர் அவ்வாறு கேட்டபோது சித்தர்களால் நன்கு மதிக்கப்பட்ட முற்றுப்பெற்ற தவத்தையுடைய சவரி மூதாட்டி இராமரைக் கிட்டி, “ஓ புருஷோத்தம, தேவாதிதேவராகிய உம்மைப் பூஜித்ததால் நான் சுவர்க்கம் புகுகின்றேன். உம்முடைய தரிசனம் கிடைக்கப்பெற்றமையால் என் தவம் பயனடைந்தது; என் பிறவி வாழ்வுற்றது; நான் ஆசிரியர்களுக்குச் செய்த தொண்டு பயனடைந்தது; என் தவமும் முற்றுப்பெற்றது. ஓ பெரியோய், பகைவரேறே, மானுடர்க் கருள்செய்பவனே, உம்முடைய அருணோக்கத்தினால் யான் தூய்மை யடைந்து அழிவில்லாத புத்தேளுலகம் புகுவேன். நான் தொண்டு புரிந்துவந்த தபோதனர்கள் நீர் சித்திரகூடம் வந்து சேர்ந்தபோது ஒப்பற்ற ஒளியினையுடைய தேவ விமானங்களிலிவர்ந்து விண்ணுலகம் புக்கனர். தருமத்தை யறிந்த அப்பெரியோர்கள் அப்போது என்னைப் பார்த்து. “இராமர் உன்னுடைய ஆச்சிரமத்துக்கு வருவார். அவரையும் லக்ஷ்மணரையும் மிகுந்த பத்தியோடு உபசாரஞ்செய். அவருடைய தரிசனத்தினால் நீ அழியாத சுவர்க்கலோகம் புகுவாய்” என்றார்கள். ஓ புருஷோத்தம, இவ்வாறு அந்தப் பெரிய தபோதனர்கள் எனக்குச் சொன்னார்கள். நான் தங்களுக்காகப் பம்பைக்கரையி லுண்டாகிய பல கனிகளைச் சேர்த்து வைத்திருக்கிறேன்” என்று இவ்வாறு சொன்னாள். தருமாத்துமாவாகிய இராமர் முக்காலங்களையுமறிந்த சவரியைப் பார்த்து, “உன்னுடைய தவத்தினாற்றலையும் உன்னுடைய ஆசிரியர்களது தவத்தினாற்றலையும் தனு சொல்ல நான் கேட்டிருக்கிறேன். உனக்கு விருப்பமதுவாயின் அதை நான் இப்பொழுது என் கண்களால் பார்க்க விரும்புகிறேன்” என்றனர். இவ்வாறு இராமர் கூறக் கேட்ட சவரி அந்தப் பெருங் காட்டை அவர்களுக்குக் காட்டலுற்று, “ஓ இராகவா, மிருகங்களும் பறவைகளும் நிரம்பி அடர்ந்த மேகம்போல் விளங்குகிற இந்தக் காட்டைப் பாரும். இதற்கு மதங்க வனம் என்று பெயர். இக்காட்டில்தான் சுத்தாத்துமாக்களாகிய எனது குரவர்கள் தங்கள் தேகத்தை மந்திரங்களினால் மந்திரமாகச் சம்ஸ்காரம் பண்ணி ஓமாக்கினியில் ஆவுதி செய்தார்கள். இந்த வேதிகையின் மேல்தான் அவர்கள் எறி நடுங்குகின்ற கைகளினால் தேவர்களுக்குப் புஷ்பாஞ்சாலி செய்வது. ஓ ரகுகுலோத்தம, இதோ பாரும், இந்த ஒப்பில்லாத அழகிய வேதிகை அவர்களுடைய தவத்தின் மகிமையால் இன்னும் ஒளி கான்றுகொண்டு நிற்கின்றது. இதோ பாரும், இவ்விடத்தில்தான் எழுகடல்களும் விரதங்களினால் தேகம் இளைத்து இயங்கச் சக்தியற்றிருந்த அவர்கள் நினைத்தபோது வந்து தோன்றியது. அவர்கள் நீராடிவிட்டு இந்த மரங்களில் தூக்கின மரவுரிகள் இன்னும் உலரவில்லை. அவர்கள் தேவபூசை செய்த நீலோற்பல மலர்கள்கூட இன்னும் வாடவில்லை. நீங்கள் இந்தக் காடு முழுதையும் கண்டு கேட்கவேண்டியவைகளெல்லாவற்றையும் கேட்டுவிட்டீர்கள். இனி உமது அனும

திப்படி இத்தேகத்தை நீக்கிவிட்டு இவ்வாச்சிரமத்துக்கு உடையோர்களும் சுத்தாத்துமாக்களுமாகிய நான் தொண்டு செய்துவந்த முநிவர்களுடைய சன்னிதிக்குப் போக விரும்புகிறேன்" என்றாள். அந்தத் தவமூதாட்டி சொல்லியவற்றை யெல்லாம் இராமர் லக்ஷ்மணரோடு கேட்டு மிக்க சந்தோஷமடைந்து "இது ஆச்சரியம்!" என்று சொல்லி மிக்க தவத்தினையுடைய சவரியை நோக்கி "மாதே, நீ என்னைப் பூசை செய்துவிட்டாய். இனி நீ உன் விருப்பத்தின்படி சுகமாகச் செல்லலாம்" என்றார். இராமர் அவ்வாறு அநுமதி கொடுக்க ஜடை தரித்து மரவுரியும் மான்தோலும் உடுத்து நின்ற சவரி தீயில் குதித்து அக்கினிப் பிழம்புபோல ஆகாயத்தில் எழுந்தாள். அவள் திவ்விய ஆபரணங்களணிந்து திவ்விய மலர்மாலை புனைந்து சந்தனம்பூசித் திவ்விய வஸ்திரந்தரித்து மிக அழகாக விளங்கி மின்னற்கொடிபோல அவ்விடத்தை விளக்கஞ் செய்தாள். சவரி தனது தவத்தின் மகிமையால் புண்ணியாத்துமாக்களாகிய தனது ஆசிரியர்கள் வசித்த புத்தேளுலகம் புகுந்தாள்."

இன்னவாறு இராமற்குக் கனியுதவக் காத்திருந்தாள் ஒரு தவப்பெண். தாமொன்று பெறுவதற்கன்றி எம்பெருமானுக்கு ஈவதற்கே காத்திருப்பாரனைவரும் உய்வர்.

ஆரணிய காண்டம் முற்றிற்று.

---

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

### ஆராய்ச்சி

[883-வது பக்கத் தொடர்ச்சி]

அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் அலான்ஸோவும் இவர்களைச் சார்ந்த ஏனையோரும் பெரிது ஒன்றும் பொருள்படுத்திக் கருதுதற் குரியவர் அல்லர். கடலினின்றுங் கரையேறி இவர்தம்முள் நெடிது உரையாடிய அச்சொற்கள்தாம் (அங்கம் 2. களம் 1.) இந் நாடகப் முழுவதும் மிகவுஞ் சுவையற்றவை. பெரியமனிதர்கூட்டத்தில் பேசப்படுகின்ற விநோதப் பேச்சுக்கள் எல்லாம் இப்படியே என்று ஷேக்ஸ்ப்பியர் பரிகசிக்கின்றாரோ என்று எண்ணினுந் தகும். நல்லவன் அந்தக் கன்ஸாலோகூட உயரிய சிறப்புடன் யாதும் விளங்கவில்லை. அரசனது அவையில் பழகிப்பழகிப் பழந்துணி போல்நைந்திருக்கும் இம்மந்திரக்கிழவனையும் ஷேக்ஸ்ப்பியர் மெல்லிய பரிகசத்திற்கே இலக்காக்குகின்றார். இதையாளனை இவன் தூக்குமரத்திற்கே போக்குவானாயினும் (அங்கம் 1. களம் 1.) இறுதியில் அவ்விதையாளன் இடித்துரைக்கும் வசைகளை உண்பவன் இவனே. அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் ஒருபுறமாக இவனைப் பரிகசித்துக்கொண்டிருந்ததையெல்லாமறியாதான்போல் அறிந்திருந்து இறுதியில், சிரிப்பத்தனையும் அவர் முகத்திலேயே—

அலான்ஸோ:—போதும், இனி வேண்டா. நீ எனக்குப் பேசுவது ஒன்றுமில்லை.

கான்ஸாலோ:—தலைவ, உன் உரையை நானும் நனி நம்புகின்றேன். ஒன்றற்குமின்றியே என்றும் சிரிக்கின்ற உணர்வுமிக்க நுண்ணிய ஈரலுடைய இப்பெருமக்களுக்கோர் செவ்வியளிக்கவே யானிது செய்தனென்.

அன்டோனியோ:—நாங்கள் சிரித்தது உன்னையே.

கன்ஸாலோ:—களிப்புடைய இவ்வசட்டாட்டத்தில் யான் உங்களுக்கு ஒன்றுமில்லை. ஆதலின், இன்னமுந் தொடர்ந்து, நீங்கள் ஒன்றுமின்றியே சிரித்து மகிழலாம்.

—அங்கம் 2. களம் 1. பக்கம் 474

என எறிந்துவிட்டானாயினும், அறிவினது ஆழமற்ற வீண்வம்பின் கிளர்ச்சியேயன்றி இது வேறன்று. கன்ஸாலோ நல்லவன்; ஆதலின் அவன் அசட்டுத்தனத்தையெல்லாம் பொறுத்துக்கொள்ள மனம் இசைதல் நமக்கு எளியதே. எனினும், இவன் அசட்டுரைகளினின்றும் நமக்கொரு நல்லறிவினை எடுத்தளிக்காமல் ஷேக்ஸ்ப்பியர் விட்டிலர். அரசனது துயரத்தைமாற்றுதற்கு முயன்று இவன் உரைகளை வளர்க்குங்கால்,

இத்தீவினிற் குடிசெய்யுங் கருமம் என் கை இருக்குமாயின், தலைவ, இந்த இராச்சியத்தில் நான் எல்லாவற்றையும் எதிர்மாறாகச் செய்து அமைப்பேன்; எவ்வகைப் போக்குவரவிற்கும் இடங்கொடேன். நீயாயாதிபதி என்ற பேர்தானு மிருக்காது. கடிதங்கள் காணமாட்டா. செல்வமும் வறுமையும் கூலிக்கு வேலைகொள்வதும், ஒன்றுமில்லை. ஒப்பந்தம், வார்சுரிமை, ஒத்தி, சுத்தக் கிரயம், செக்குபந்தி, கட்டுக்கோப்பு, மாவடை மரவடை, சலநிதிபாஷாணம்-ஒன்றுமில்லை. உலோகங்கள் தானியங்கள் அல்லது மதுவகை, எண்ணெய், ஒன்றிற்கும் உபயோகமில்லை. தொழில் ஒன்றுமில்லை; மனிதர் அனைவரும் சும்மா விருக்கவேண்டும்—எல்லாரும்-மாதருங்கூட; ஆயினும், அவர் பழியில்லாத் தூய்மையுடனிருப்பார். ஆட்சியில்லை:—

ஸபஸ்ட்டியன்:—எனினும் இதற்குஇவன் அரசனாகி இருப்பானும்.

அன்டோனியோ:—இவனது குடியரசின் பின்வரு முடிவு துவக்கிய முதலை மறக்கின்றது.

—அங்கம் 2. களம் 1. பக்கம் 473.

என வரும் இப்பாகம் பரிகசச் செய்தியே யாயினும் ஊன்றிநோக்குங்கால் அதனகம் உறுபொருள் உண்மையும் புலப்படும். சீர்திருத்தகாரர்கள் அனைவரும் நம் அசடன், ஆயினும் நல்லன், ஆகிய கன்ஸாலோவின் மிக்கதோர் அறிவின்திறம் வாய்ந்தவர்களாக எந்நாளும் எந்நாட்டிலும் அமைதலரிது. முடிவேனும் முதலைமறக்கும், முதலேனும் முடிவை நினையாமல் துவக்கும். சீர்திருத்தங்களுக்குள் அடங்கிய இச்சிரிப்பினைத் தெரிந்துகொள்ளவல்லவர் மிகச்சிலரே. எனினும், அதனைச் சிரிக்கின்றவர் அனைவரும் உத்தமர்களும் அல்லர். கொலைக்கஞ்சாக் கொடியோர் அன்டோனியோ ஸபஸ்ட்டியன் போன்றவர்களையும் அன்னவர்க்கிடையே காணலாம். உலகத்தில் ஒரு பாதி அசடர் மறுபாதி துஷ்டர் எனினும், இரண்டுமின்றி உலகினை மறந்துகல்வியிலேயேகருத்தத்தனையும்செலுத்திய பான்மையால், ப்ராஸ்ப்பீரோவைப் போல் அறிவும் ஆற்றலும் அவைகளோடு நல்லகுணமும் வாய்ந்தவர் ஒருவர் இருவர் இருந்தாற்றான் அசடர்களும் கசடர்களும் அடங்குவா ரென்பது ஷேக்ஸ்ப்பியரின் கருத்தாக இருப்பினும் இருக்கலாம். விடுதலைப் பேச்சின் கொடுமையைக் காலிபனிடத்தில் காட்டினார். அதனை அளிக்கவருகின்றவர் கயமையை ஸ்ட்டிப்பானோட்ரின்குலோக்களினிடையே கண்டோம். கீழினத்தவரிடத்துமட்டுமே இவ்வாறு நிகழ்கின்றதெனக் கருதி ஒருவரும் தம்மை மகிழ்ந்துகொள்வதற்கில்லை. ஷேக்ஸ்ப்பியர் போன்ற மெய்யுணர்வுடைய புலமையோர் மூலநோக்கத்தை நினைப்பாரன்றி, செய்கையின் வேறுபாட்டை அதன்-அளவினால் சிந்திக்கமாட்டார். "ஜூலியஸ் ஸீஸர்" என்னும் நாடகத்தில், ப்ரூட்டஸ்ஸும் காஸ்ஸியஸ்ஸும், விடுதலை சுதந்தரங்களை எம்முறையில் விளம்பி எம்முறையில் இயற்றினர்களோ அம்முறையிற்றானே இங்குக் காலிபன் விளம்புவதும் இயற்றுவதும் ஆகின்றான். மகா ஸீஸரைக் குத்தி வீழ்த்தியவுடன்—

ஸின்னு:—சுதந்தரம்! விடுதலை!......ஓடுங்கள் விளம்புங்கள், தெருக்களில் இதனைக் கதறுங்கள்.

**காஸ்ஸியஸ்:**—பொதுமன்றங்களுக்குச் சென்று சிலர், "சுதந்தரம், விடுதலை, உரிமையின் வருகை" என்று கூவுங்கள்.

"ஜூலியஸ் ஸீஸர்":—அங்கம் 3. களம்.
5-வது வால்யூம் 334-வது பக்கம்.

எனக் கதறுவார் அவராயின், காலிபன், அன்னதே அனையவோர் கன்னெஞ்சினால், "அடே யடே விடுதலை, விடுதலை யடே யடே' என்று விளம்பியவாங்கே ப்ராஸ்ப்பீரோவின் தலையில் கல்லைப்போடப் புறப்படுவான். "உரிமையின் வருகை" என்பதனைய உயரிய மொழிகளால் தன் கொடுமைக்குப் பகட்டுநிறம் பூசவோ காலிபன் அறியான்; அவர்கள் கத்தி யனைய நாகரிகக் கருவிகளால் குத்தினரெனின், இக் காட்டுமிருகாண்டி கற்பாறையைக் கொண்டு செல்லலாம். இதனில் வேற்றுமை யுளதெனக் கொள்வார் கொள்க; ஷேக்ஸ்ப்பியர்கண்டிலர். காலிபனுக்கு விடுதலையளிக்க வந்த ஸ்ட்டிபானோ, அத்தீவிற்குத் தானே அரசனும் அக்காலிபன் தனக்கு அடிமையும் ஆவதில் ஐயங்கொண்டிலன். தன் கட்சியைச் சேர்ந்த ட்ரின்குலோவை அடக்கிவைப்ப தெங்ஙனம்என்பேத அவன் கருத்து. உரோம் நகரிற்கு விடுதலை அளிக்கப் புகுந்த ப்ரூட்டஸ்ஸும் காஸ்ஸியஸ்ஸும் இதனின்று பெரிது ஒன்றும் வேறுபடவில்லை. இவர்களை எதிர்த்த ஆன்டனியும் ஆக்டேவியஸ்ஸும் அப்படியே. நம் ஸ்ட்டிப்பானோவும் ட்ரின்குலோவும் பழந் துணிக்குப் பூசலிட்டார்களென்னுன்,ப்ரூட்டஸ்ஸும் காஸ்ஸியஸ்ஸும் கொள்ளைப்பொருளைப் பகிர்ந்துகொள்வதில் பூசல் புரிந்தனர்.

விடுதலை முதலிய பெரிய சொற்களைப் பேசாமலே சதிசெய்யுந் துரோகிகள் அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும். ஒருமுறை துரோகம்செய்த அன்டோனியோ, தூங்குவோரைக்காணுந்தோறுந் துரோகமே செய்ய ஆயத்தமாயிருக்கின்றான். அலான்ஸோவைக் கொல்வதற்கு அவன் தம்பி ஸபஸ்ட்டியனைத் தூண்டியவன், அத்தகைய பாதகத்தில் கைதேர்ந்த இவ்வன்டோனியோவே என்னத் தோன்றினும், கொலைசெய்யத் தூண்டப்பெறுவதற்கு ஸபஸ்ட்டியனும் வேண்டிய அளவு ஆயத்தமாயிருந்தான். தானே கெட்டவனல்லாதவனை ஒருபோதும் வேறு ஒருவன் கெட்ட வழியில் செலுத்த இயலாது. புரூட்டஸ்ஸின் மனது காஸ்ஸியஸ்ஸினால் கலைக்கப்பட்டது என்பது பொருந்தாதென்ன ஷேக்ஸ்ப்பியர் காட்டியவண்ணமே, ஸபஸ்ட்டியனை அன்டோனியோ கெடுத்தானென்பதன் பொருத்த மின்மையையுங் காட்டுகின்றார். பாதியிற் பாதகனானவன் ஸபஸ்ட்டியன், ஆதிப்பாதகன் அவ்வன்டோனியோ. பன்னிரண்டுவருடங்களாகியும் அவனது துர்க்குணம் மாறவில்லை; கணுவிற்குக் கணு பாதகமே அவனை இயக்குகின்றது. ஏரியல் அலைத்த போதும் அவனது மனச்சாக்ஷி உறங்கியே கிடந்தது. இப்பொழுதும், பொறாமையும் பகையும் வெகுளியுமே கொள்கின்றான். இப்பொழுதும் கொலைசெய்ய அவன் வாளேவெளிவருகின்றது.முன் ப்ராஸ்ப்பீரோவிற்கு அன்டோனியோ கொடுமைசெய்ய உதவியாய் நின்ற அலான்ஸோமாத்திரம், புத்திரனை இழந்தசோகத்தால் மென்மையடைந்து நின்றதன்மையில்,ஏரியல் அவன் குற்றத்தைக் கூறி இடித்துரைத்தவுடன்,

ஓ, இது கோரமானது, கோரமானது, கல்லோலமே எனக்கதனை எடுத்துச் சொல்லிப் பேசியதென்ன எண்ணினேன். காற்றும் அதனை எனக்குப் பாடிக் காட்டிற்று. ஆழ்ந்தொலித்து அச்சந்தரும் வாச்சியக்குழலாய் இடியோ ப்ராஸ்ப்பரின் பேரினைப் பகர்ந்தது; என் குற்றத்தைக் குமுறியது அது. ஆதலின் அளறிலேவளர்த்தப்பெற்றான் என்மகன்; விழுதும் அளந்தறியா ஆழம் வரை அவனைத்தேடி அங்குநான் அவனோடு புதைந்து கிடப்பேன். —அங்கம் 3. களம் 3. பக்கம் 642

என இத்துணைகாலந் தூங்கிக்கிடந்த இவன் மனச்சாக்ஷி கண்விழித்துக் கலுழ்கின்றது. பித்தேறி ஓடுகின்றான். அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும்கூடப் பித்தேறி ஓடுகின்றாராயினும் இன்னமும் அவர் தீமையே பூண்ட கயவர்களாயிருக்கின்றனர். அலான்ஸோ தன் குற்றத்தில் அடியுடன் உறைந்துவிடலாகாதென்பது இந்நாடகத்தின்நிகழ்ச்சிக்கு அவசியமாயிருக்கின்றது. இல்லையேல் அவன் மைந்தன் மிராண்டாவை மணப்பது கடினமாகிவிடும்.

இனி, முடிவிற்கு வருகின்றோம். ப்ராஸ்ப்பீரோ தன் மந்திரக்கலையின் வலிமையால் மாநுடங்கடந்த ஆற்றலுடையவனாக இருக்கின்றான். அத்தீவும் அதன்கண் நிகழ்ந்தவைகளும் அவ்விதமே இயற்கை முறையைக் கடந்தன. இன்னபடி தான் மனித இனத்தினின்று நெடுந்தூரம் விலகிநிற்கவேண்டி நேர்வதை அவனே உணர்ந்தனன். மனிதரோடுசேர்ந்துவாழ ஊர்நோக்கித்திரும்புகின்றான். ஆதலின் இனிஇவன் மனிதனேயாகி இருக்க விழைகின்றான். மாநுடர்க்கு உரியஆற்றலிற்கு மேலாய ஆற்றலொன்றும் இனித் தன்கையில் வைத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆதலாற்றான் அவன் தன் மந்திரத் திறமையெல்லாம் துறந்துவிடுகின்றனன். இந்தத் துறவு மிகப்பெரியது. மனிதரைத் தன் மனம்போல் ஆட்டிவைக்கவல்ல ஓர் ஆற்றலும் அதிகாரமும் முயன்றுபெறுவது அரிதிற்பெறுகின்ற பேறே என்பதில் ஐயமில்லை. ஆயினும் இந்த ஆற்றலைப் பிறருக்குத் தீமைபுரியும் நெறியில் செலுத்தாமல் தன் தகைமையைக் காத்துக்கொள்வது அதனினும் அரிது. இவ்வருமையைப் ப்ராஸ்ப்பீரோவின்பால் சிறப்புறக் கண்டோம். அதனினும் அரியது யாதெனில், மனித இனத்தினின்றும் தன்னை மேலாக்கிப் பிரிக்கின்ற அவ்வாற்றல் தனக்கு வேண்டாவென்று துறந்து மீண்டும் மனிதருடன் சமநிலையில் வாழ விரும்புவதே யாம். செயற்கரிய இது செய்தானதலின், இத்துறவினை விளம்புகின்ற ப்ராஸ்ப்பீரோவின் சொற்கள் இனிமையும் மென்மையும் செம்மையும் வாய்ந்து காவியச்சுவை ததும்பித் திகழ்கின்றன:—

மலைகாள், ஓடையின், நிற்கும் ஏரியின் ஆவிகாள், உங்கள் அழுந்தாத கால்களால் பெருகிவரும் கடலினை மணல்மீது துரத்தி அதுதான் திரும்பி வருங்கால் ஓடுவீர் ... ஆடுகள் கறிக்காத கைக்கின்ற பச்சை வளையங்களை ... வொளியிற் செய்யும் பாதிப் பதுமையீர்; இரவு மணி ஒலிக்கக் கேட்டுக் களிகூர்ந்து நள்ளிரவில் நாய்க்குடை செய்து விளையாடுவீர். மிக நொய்ய எசமானர்களே நீங்கள் ஆயினும், உந்தம் உதவியைக் கொண்டு யான் நண்பகற் கதிரோனை மங்கச் செய்துளேன். இகலுடைய காற்றினை வெளிக்கிளப்பி, பச்சைக் கடலிற்கும் நீலநிறக் ககனத்திற்கும் இடையே முழங்கும் போர்கள் மூட்டியுள்ளேன்; நடுநடுங்கக் கிடுகிடுக்கும் இடியினுக்கு நெருப்பூட்டி, ஜோவின் பருத்த அரசமரத்தை அவன் படைகொண்டே பிளந்துளேன்; அடிவலுத்த மலைகளை யான் அசைத்துள்ளேன்; பனையையுந் தேக்கையும் யான் வேருடன் பறித்துள்ளேன். ஆற்றல் மிகுந்த என் மந்திரக் கலையினால் என் கட்டளைப்படி கல்லறைகள் திறந்து தம்முள் துயின்றோரை எழுப்பி வெளியே செலுத்தியுள. எனினும், முரடான இம்மந்திரத்தை நான் இப்பொழுது துறந்துவிடுகின்றேன். இந்த மந்திரம் செலுத்தப்பட்டிருப்பவர் அறிவினில் என் கருத்தைப் புகுத்தற்குத் திப்பியஇன்னிசை யான் சிறிது வேண்டியபின்-இப்பொழுதே வேண்டும் அது-என் கோலினை உடைத்து மண்ணில் ஆழப்புதைத்து, விழுதுகள் இதுகாறும் அளந்துள்ள ஆழத்திற்கும்அடியில் என் புத்தகத்தை அமிழ்த்திவிடுவேன்.

—அங்கம் 5. களம் 1. பக்கம் 714.

ஆதலின் மந்திரம் முடிந்துவிட்டது. ஏரியல் தனக்குரிய விடுதலையை அடைந்தது. இளவேனில் மாலைகளில் பூவின் நற் கிண்ணத் தூடு இன்துயில் இன்றும் புரிகின்றது போலும் அல்லது, வேனிலிற் பறந்துவரும் வாவலின் முதுகினின்று நம்மைத் தன் குறும்புடைய கடைக்கண்களால் பார்த்து நகுவதுமாகலாம். மஞ்சள்நிற மண்லின்மீது நர்த்தனம் புரிந்து விளையாடிய நீரமகளிரும், காலிபனைக் கிள்ளிக்கிள்ளிக் களித்த பிள்ளைப்பேய்களும் எல்லாந் தத்தம் இருப்பிடம்

மூலிகைசோதகசிற்றுணைகூ

[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சேர்ந்துவிட்டதால் இனி அத்தீவு வறிதே கிடக்கின்றது. அத்தீவின்கண் பெருகிய இன்னிசையும் மெல்லொலியும் இனி இல்லை. அவ் விந்தைத் தீவும், அதன் சோலைகளும், பொன்னிற மணலும், பனைமர வரிசையும்எல்லாம் பிராஸ்ப்பீரோவின் புத்தகத்துடன்,விழுதுகள் என்றும் அளந்துள்ள ஆழ்த்திற்கும் அடியில் அமிழ்ந்துவிட்டன. மந்திரத்தால் சூழ்ந்த அத்தீவு ஆகாய வெளியினின்று உருக்கொண்டு வந்தது, மீண்டும் ஏரியலைப்போல் அதுவும் காற்றுடன் கலந்துவிட்டது. அங்கிருந்த மனிதரோ, மிலானிலும் நேப்ல்ஸிலும் இடம்பெற்று இருக்கின்றனர். மிராண்டாவின் இதயத்திலும் பர்டினண்ட் இதயத்திலும் ஒளிசெய்து வளர்கின்ற காதலை கடைவரை நிற்பதாகும். மற்று அவர்தாமும்,காலவளவில்,இவ்வுலகினின் றகன்றிருப்பார். எனின், இம்மைக்கும் மறுமைக்கும் நிரந்தரமாகிய அப் புலமையின் ஆன்ம உவகையே நிலைநிற்கின்றது. உண்மையாய மந்திரம் இதுவே. இந்நாடகம் இயற்றிய புலமையோன், உண்மையாய ப்ராஸ்ப்பீரோ, ஊழி பெயரினும், வாழி, உலவாப்புகழுடன் திகழ்ந்து நிலை நிற்பவனாவான்.

ஷேக்ஸ்ப்பியரே தன்னை ப்ராஸ்ப்பீரோவாகச் சித்திரம் செய்துகொண்டு, தன் மனோபாவமாய ஏரியலைக் கொண்டு இயற்றிய இந்திரசாலங்களென்னும் நாடகக் கலைக்கு இங்கு விடைகொடுக்கின்றாரெனக் கருதுவார் சிலர். விந்தை உலகங்கள் பலப்பல படைத்துள ஷேக்ஸ்ப்பியர் இனி, தன் கோலினை உடைத்துப் புத்தகத்தைமுழுக்கிவிட்டுப் படைப்புத்தொழிலினின்று ஓய்வுகொள்ளலாகின்றார். இந்தக் கருத்தை இன்னுஞ் சிறிது தொடர்ந்து கூறலாம். ஷேக்ஸ்ப்பியர் தான் செய்து முடித்த கருமத்தின்மீது கண்களைச் செலுத்தி, உலகத்தின் இன்பதுன்பங்களையும் உட்கொண்டு, இன்னவைகளைப் பற்றிய தன் சித்தாந்தத்தை, ஆவிக்கூத்துமுடிந்தபின் பர்டினண்டிற்கும் மிராண்டாவிற்கும் எடுத்துரைத்த வாசகத்தால் வெளியாக்குகின்றனர் என்று நாம் கொள்ளக்கூடுமோ? நாம் பொருளாகக் கருதுகின்ற, பெருமை, புகழ், செல்வம், அன்பு, உலகத்தின் துன்பம், தத்துவத்தின் முகில்முடித்த கோபுரங்கள், அரண்மனைகள் ஆலயங்கள், இக் [illegible]ந் தானும், அதனுள் நடமாடுகின்ற மானுட அல்லல்கள் அனைத்தும், அவ்வல்லலுக்குப் பாத்திரமாய மனிதர் அனைவரும், பின்னே ஒரு படலம் விட்டுவைக்காமல் கரைந்து தீர்ந்துவிடும் மாயத்தோற்றமும் கனவின் காட்சியுந்தான் என ஷேக்ஸ்ப்பியர் கருதினரென்று கூறி, அதற்கு—

> நமது களியாட்டங்கள் இப்பொழுது முடிவடைந்துவிட்டன. நமதுநடிகர் இவை, முன்னர் யான் உனக்கு உரைத்தபடி, எல்லாம் ஆவிகள்; காற்றினுள், மெல்லிய காற்றினுள், உருகிவிட்டன. அன்றியும் அடி[illegible] மற்ற இக்காட்சியின் கட்டிடமே போல், முகில் முடித்த கோபுரங்களும், அலங்கார அரண்மனைகளும் திப்பிய ஆலயங்களும்,பெரிய இக் குவலயந்தானும், அதன் உடைமையாய அனைத்துமே, வாடி மறைந்த இப் பதார்த்தமற்ற கோலக்கூத்தே போல், பின் ஒரு படலமும் விட்டுவைக்காமல் தீர்ந்துவிடும். கனவுகளைச் செய்கின்ற அப்பொருளினால் ஆனவர்கள் நாம்; நமது சின்னாள் வாழ்க்கை ஒரு துயிலோடு சுருண்டுவிடுகின்றது.
>
> —அங்கம் 4. களம் 1. பக்கம் 688

என்னும் வாக்கியங்களை ஆதாரமாகக் காட்டலாம். மனிதர் மனத்திலே இவ்வகை எண்ணம் என்றும் புகுந்து உழக்குவது இயற்கையே. ஒருவேளை புகும்; மறுவேளை அகன்றுவிடும், சிலபோது தங்கியும்விடும். இந்த மாயாவாதத்தையே தம் மதமாகக்கொண்ட மனிதர் கணக்கிறந்தோர். எனினும், ஷேக்ஸ்ப்பியர் இதனையே உரைக்கின்ற சொற்கள் தம் ஆற்றலினாலும் அழகினாலும், புதியதோர் கருத்து இது என்று நினைக்கும்படி செய்கின்றன. ப்ராஸ்ப்பீரோ உருச்செய்து கொடுப்பதன்முன் இக்கருத்து நமது உள்ளத்தி லவ்வப்போது தோன்றியதில்லை என்று இயம்பக் கூடுமோ? இந் நாடக நிகழ்ச்சிகளினிடையே இத்தகைய சிந்தனைகள் எழுவது ப்ராஸ்ப்பீரோவின் மனநிலைக்குப் பொருத்தமாயிருக்கின்றது. எனினும், ப்ராஸ்ப்பீரோவும் — அவனுடன் ஷேக்ஸ்ப்பியரையும் கலப்போமாயின் — ஷேக்ஸ்ப்பியரும், அவர்களுக்குள்ள அறிவும் அனுபவமும் முதிர்ந்ததன் பயனாக, உலகத்தையும் மனிதரையும் மனித வாழ்க்கையையும் வீண்மாயையாகவும் பொருளற்றவைகளாகவும், நாமெல்லாம் கனவாற் செய்யப்பட்டவர்களாகவும், நம் சின்னாள் வாழ்க்கை ஒரு துயிலோடு சுருண்டுவிடுகின்றதென்றும்,வெறுப்பமதித்துஊக்கமில்லாதவோர் உலகசித்திரத்தை உரைக்கவருவார்களோ. 'கண்டகனாவின் பொருள்போல யாவதும் பொய்' என்று பிள்ளைபெருமாள் ஐயங்கார் அனைய பெரியோர்சிலர் சாற்றுவாராயினும்,அது அரங்கனது அருளின் திறத்தை மெய்ப்பித்து வற்புறுத்துவதற்கே யாம். மானுட நடமாட்டங்கள் மாயைகள் ஆகலாம்; எனினும் ஆன்மாவின் மெய்ம்மை நிரந்தரமானது; நம்முடைய வாழ்க்கை ஒரு துயிலுடன் சுருண்டுவிடுவதோ ஒருபோதும் இல்லை. நம்முடைய வாழ்க்கை உண்மை, அதனில் ஊக்கமுஞ் சிறத்தல் வேண்டும்.

எனின், ஷேக்ஸ்ப்பியர் ஏன் அங்ஙனம் கூறினர் என்னுங் கேள்விக்கு முதல் விடையாக வரவேண்டியது அவ்வாறு கூறினவர் அவர் அல்லர் என்பதே. இது ப்ராஸ்ப்பீரோவின் வாசகம். இத்துணை அறிவு சான்றவனுக்குத்தான் இது இயற்கையாமோ என மீண்டும் வினவலாம். இதற்குவிடை அக்கட்டுரையின் இறுதிப்பாகத்தில் தேடுதல்வேண்டும்.உலகமெல்லாம் மாயை என்னும் இச்சித்திரம் அல்லலுற்றுக் களைத்திருந்த ப்ராஸ்ப்பீரோவின் மனத்தினின்று எழுந்ததேயன்றிச் சிந்தனையின் தெளிவினால் தோன்றியதன்று, என்பதை மறத்தலாகாது. மாயாவாதங்களெல்லாம், களைத்துத் தளர்ந்த மனத்தினர்க்குரிய மதக் கொள்கையாகும்—

> ஐய, யான் அல்லலுற்றிருக்கின்றேன்;என் தளர்ச்சியைப் பொறுத்திடுக. முதிய என்மூளை கலங்கியுளது. என்னுடைய நொய்ம்மையின் பொருட்டு நீ கவலவேண்டா ......மோதுகின்ற என் மனத்தினைத் தணிப்பதற்கு ஒன்றிரண்டடிகள் யான் உலவிவருகின்றேன்.
>
> —அங்கம் 4. களம் 1. பக்கம் 688

என்று ப்ராஸ்ப்பீரோ முடிப்பதே, இக்கொள்கையைக் கூறுவோர்தம் தன்மையின் இரகசியத்தைஷேக்ஸ்ப்பியர் நமக்குக் குறிப்பித்துக் காட்டிய சூழ்ச்சி என்னலாம்.

எல்லாங் கிடக்க, பர்டினண்டும் மிராண்டாவும் ஓர் கனவின்கண்ணே ஆழ்ந்துள்ளார் என்பதைப்ராஸ்ப்பீரோ அவர்களுக்கு இத்துணை முயன்று எடுத்துக் காட்ட விழைந்ததெல்லாம் மிகையே. கனவின் திறத்தை நனிமிக அறியரோ காதலர்தாம்.

முற்றும்

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஜூல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக.தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மேடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிற்றாமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகளி
ஜ்வரேக்

# 1933-வது வருடத்திய வால்யூம் 6. அட்டவணை

[ஜூலை முதல்—டிஸம்பர் வரையில்]


## தலையங்கம்

இதழ் — பக்கம்

26 கலாநிலயம் ... ... 501
27 தன்னலமே பிறன் கேடு ... ... 517
28 வால் வேறு வாய் வேறு ... ... 533
29 வீண் வீண் எல்லாம் வீண்... ... 549
30 புத்தக வித்தகம் ... ... 565
31 அவி வேறு அவல் வேறு ... ... 581
32 இதயமும் உயிரும் ... ... 597
33 கடலிற் கலந்த காட்டாறு ... ... 613
34 புதுப்பிறவி ... ... 629
35 அறிந்து பெற்ற அறியாமை... ... 645
36 காட்சியே காணல் ... ... 661
37 பிறவாதார் பிழைக்கமாட்டார் ... 677
38 புன்மையின் மேன்மை 1 ... ... 693
39 „ 2 ... ... 709
40 „ 3 ... ... 725
41 தோற்றமும் இருக்கையும் ... ... 741
42 கற்பனையும் காட்சியும் ... 757
43 முன்னும் பின்னும் ... 773
44 யானையை விளம்பித் தேரையை யியற்றல் 1 789
45 „ „ 2 ... 805
46 ஏழைச் செல்வம் 1 ... 821
47 „ „ 2 ... 837
48 புறங்கை இன்பம் 1 .. 853
49 „ „ 2 ... 869
50 ஆறுவது ஆண்டின் நிறைவு ... 885

## கம்பராமாயணம்—ஆரணியகாண்டம்

### சடாயு வுயிர் நீத்த படலம்—8

26 வெகுளவும்வேண்டும் பிறர்பொருட்டன்றே 503
27 ஆசைக் கடலும் அன்பின் திரையும் ... 519
28 விரைய விளம்பவோ மறைய வருதல் ... 535
29 முன்மொழி மாறத் தென்மொழி ... தேர்ந்தனர் ... 551
30 கூனியு மரக்கனுங் கூறுகொண் டேற்றனர் 567
31 அறிவு துணிய வஞ்சுமா முணர்வு ... 583
32 கவிதா நீதியைக் கைவரக் கொள்பவர் ... 607
33 ஆசை பத்து வென்றவ னுசை யொன்று வென்றிலன் ... 615
34 கம்பர் கருத்தினைக் கழுகு மறிந்தது ... 631
35 வெல்வதும் பாவமா வேதங் கூறுமே ... 657
36 அஞ்சினு மஞ்சுக தமிழி லஞ்சுக ... 673
37 சுழலான் வீரன் சுழன்றன யாவும் ... 689
38 கடவுளில்லாதா ரன்றோ கலங்கிட வேண்டு மம்மா ... ... ... 697
39 விதிவய மென்பதே மதியினால் வெலல் ... 711
40 வெம்மையின் வெகுண்ட சீற்றம் செம்மையாய் மாறிற் றன்றே ... 738
41 வெளிநின்றே மறையும் விந்தை ... 753

### அயோமுகிப் படலம்—9

42 அறத்தினை யயிர்ப்பது மயர்வின் செய்கையே ... ... 770
43 ஈதா கும்மோ கோதா விரியே ... ... 785
44 நேசமி லாசை யன்பென லாமோ 791
45 நெடுமால் திருநா டகக்காண் நிசமே ... 818
46 பொருளில தெனின்புவி யுளதெனலாமோ 831

### கவந்தப் படலம்—10

47 இராமனெடு கம்பருந் தளர்த லியற்கையே 846
48 கவந்தனைக் காணக் கம்பரே கலங்கினர்... 855
49 விண்ணவ ரிரங்க விறக்கவோ விரைந்தார்... 880

### சவரி பிறப்பு நீங்கு படலம்—11

50 புண்ணிய முருகிய பொய்கையே காத்தது 893

## நம்மாழ்வார் வைபவம்.

இதழ் — பக்கம்

26 5-ம் பத்து, 4-ம் தசகம். ஊரெல்லாம் 1–5 ...510
27 „ „ „ 6–11...527
28 „ 5 „ எங்ஙனேயோ 1–6 ...544
29 „ „ „ 7–11...557
30 „ 6 „ சடல் 1–5 ...573
31 „ „ „ 6–11...589
32 „ 7 „ கோற்றநோன்பு 1–5 ...604
33 „ „ „ 6–11...623
34 „ 8 „ ஆராவமுதே 1–5 ...639
35 „ „ „ 6–11...651
36 „ 9 „ மானேய்நோக்கு 1–5 ...668
37 „ „ „ 6–11...684
38 „ 10 „ பிறந்தவாறும் 1–2 ...699
39 „ „ „ 3–5 ...719
40 „ „ „ 6–8 ...730
41 „ „ „ 9–11...748
42 6ம் பத்து. 1-ம் தசகம். வைகல்பூங் கழிவாய் 1–5 ...765
43 „ „ „ 6–11...777
44 „ 2 „ மின்னிடைமடவார் 1...796
45 „ „ „ „ ...810
46 „ „ „ „ ...825
47 „ „ „ 2–3 ...843
48 „ „ „ 4–5 ...865
49 „ „ „ 6–7 ...877
50 „ „ „ 8–11...887

## காற்று மழை
(Shakespeare's Tempest)

26, 27 அங்கம் 2. களம். 1 506, 523
28, 29 „ „ 2 537, 554
30 „ 3. „ 1 570
31, 32 „ „ 2 586, 602
33, 34 „ „ 3 617, 641
35, 36, 37, 38 „ 4. „ 1 655, 671, 688, 702
39,40,41,42,43,45 „ 5. „ 1 713, 731 751, 769, 783, 812
47, 48, 49, 50 ஆராய்ச்சி 848, 863, 882, 895

## கலித்தொகை—பாலைக்கலி

26 பாலைக்கலி, 15:—பாடின்றிப் பசந்தகண்... 509
27 „ 16:—படைபண்ணிப் புனையவும் 522
28 „ 17:—அரும்பொருள் வேட்கை 542
29 „ 18:—செவ்விய தீவிய ... 562
30 „ 19:- பல்வளம் பகர்பூட்டும்... 577
31 „ 20:—பான்மருண் மருப்பி ... 593
32 „ 21:—உண்கடன் வழிமொழி 601
33 „ 22:—இலங்கொளி மருப்பிற் 626
34 „ 23:—நெஞ்சு நடுக்குறக் ... 643
35 „ 24:—வயக்குறு மண்டிலம் ... 654
36 „ 25:—ஒருகுழை யொருவன்போ 670
37 „ 26:—ஈதலிற் குறைகாட்டா ... 686
38 „ 27:—பாடல்சால் சிறப்பிற் ... 701
39 „ 28:—தொல்லெழில்வரைத்தன் 720
40 „ 29:—அருந்தவ மாற்றியார் ... 735
41 „ 30:—கடும்புனல் கால்பட்டுக்... 747
42 „ 31:—எஃகிடை தொட்டகார்க் 768
43 „ 32:—வீறுசான் ஞாலத்து 784
44 „ 33:—மன்னுயி ரேமுற 802
45 „ 34:—மடியிலன்செல்வம்போன் 816
46 „ 35:—கொடுமிட ஞஞ்சிலன் 834





## பொதிகை நிகண்டு—இரண்டாம் பாகம்

இதழ் — பக்கம்

26, 27 ப. ... 515, 530
28 பா. ... ... 547
29 பி. பீ. பு. ... ... 563
30 பூ. பெ, பே, பை, பொ, போ, பௌ 578
31 ம. ... ... 595
32 மா, மி, மீ. .... ... 611
33 மு, மூ, மெ, மே, மை, மொ, மோ, ய, யா, யு, யோ. ... ... 627
35 வ. ... ... 659
36 வ, வா, வி. ... ... 675
37 வீ, வெ, வே, வை, வௌ ... 692

## யாப்பிலக்கணம்

26 விருத்தம் - வெளிவிருத்தம் ... 511
27 „ ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் ... ... 526
41 கூன், விகாரம் ... ... 749
42 வகையுளி, வனப்பு ... ... 766
43 பொருள்கோள் ... ... 779
44 „ ... ... 798
45 46, 47, வண்ணம் ... 817, 833, 845
48 வழு ... ... ... 857
49 விருத்தம் - பொது ... ... 873

## மானத சாத்திரம்

33 34, 35 குறிப்பு ... 624, 637, 649
40 41, 42 உன்னிப்பும், அக்கரையும் ... 736, 745, 766

## அமீல்—Henri Frederic Amiel.

28, 29. 30, 31, 34 } 545, 560, 578, 594, 633
35, 36, 37, 38 } 653, 667, 685, 705

## அப்பர்

அப்பரும் 64 கலைகளும்—30. வியாகரணம்

26 திணையும் பாலும் ... ... 508
28 பெயரும் இடையும் ... ... 542
31 வினைச்சொல்லும், காலமும் ... 593
32 செய்யுமென்முற்று ... ... 606
33 உரிச்சொற்கள் ... ... 622
36 யாப்பியல்—அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம் ... ... 663
37 எழுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தம் கலித்துறை ... 682
38 கலிவிருத்தம் ... ... 704
39 விதிவிலக்குறு விருத்தங்கள் ... 717
40 சந்தவிருத்தம் - தமிழில் உண்டான குழப்பம் ... ... 727
41 சந்தமும் தமிழ்மாத்திரை அளவைகளும் 746
42 கலிச்சந்தம் சந்தக்கலி—வகைகள் ... 759
43 சந்த விருத்தம் - வகைகள் ... 775
44 அறுசீர்ச் சந்தவிருத்தம் ... 794
45 எழுசீர், எண்சீர், சந்தவிருத்தம் ... 807
46 விதிக்குப் புறம்பாய சில சந்தவிருத்தங்கள் 823
47 சந்தவிருத்த அடிகளின் பேதம் ... 841
48 ஆரியச்சந்தங்களின் தமிழ்ப்பரிணாமம் ... 858
49 புகலிவேந்தர் படைப்பின் யாப்பு ... 875
50 ஆய்தவெழுத்தும் சந்தச்சீரும் ... 890

## தமிழ்ப்பாடம்—அஷ்டப்பிரபந்தம்

### திருவேங்கடமாலை.

26 பொன்னு மணியும், சோதிமதி. சொல்லணி - யமகம் திரிபு ... 512
27 மாலைக்கோலி, வள்ளிபுணர்ந், புள்ளரவ. பிறிதிலைநவிற்சியணி ... 528
28 வாடப்பசித்த, ஒண்சிந்தூரத்தை. உயர்வுநவிற்சி யணி, புணர்ச்சி- இயல்பு, விகாரம். ... 539

இதழ் — பக்கம்

29 திங்களிறு, வன்குறிஞ்சி. மயக்கவணி, பரிவருத்தனையணி. நால்வகைப் புணரிலக்கணம் ... 558
30 வாவுகவின், காந்தளிர, நாகத்தின், மெய் + உயிர் - புணர்ச்சி ... 575
31 காதலிற்ற, கேள்வித் துறவோரும் சிலேடையணி - செம்மொழி பிரிமொழி, மெய் + உயிர், ஈற்றுமெய் விரிந்து புணர்தல் ... 590
32 கோங்கைக்கோ, ஆயுந்துறவறத்தை, பாம்புங். செம்மொழிச்சிலேடை. மடக்கு. மெய் + உயிர் - ஈற்றுமெய் விரிந்து புணர்தல் ... 599
33 பேய்க்குமொரு, வாழ்க்கைமனை, வாழரியுஞ்—அவனுதியணி (ஒழிப்பணி) மகரமெய் + உயிர், மகரம் கெடாமை .... 619

### திருவரங்கத்துமாலை.

34 இருகூல, சின்னூல், ஒருரு. மகரமெய் + உயிர்-மகரம் கெடுதல்... 635
35 ஆடுமரவில், அறியினரங்கர், மறிக்குங் கயற்கண்ணி - மேன்மேலுயர்ச்சியணி மகரமெய் + உயிர் - மகரம் கெட்டு முன்னுயிர் நீளல் ... 647
36 மாதண்ட, ஒருதா, உன்னைக்களவி. அவதாரங்களின் வகை. உயிர் + உயிர். உயிரீறென்பதன் பொருள் ... 665
37 நறைத்துளவம். (வேற்றுமையணி) ... 679
38 மாயிரு, சோதித்திருவுரு. உயிர் + உயிர் உயிரீறென்பதன் பொருள் ... 695
39 ஓங்கார, வலைப்பால், கரணம், உயிர் + உயிர் - உடன்படுமெய் ... 715

### திருவரங்கத்தந்தாதி

40 திருவரங், செய்யவளைக்குரு. ஏ + உயிர்-யகர வகர உடன்படுமெய்... 733
41 தனமாத, தருக்கா. ... 743
42 தாளத்தனத்தத்தை, மாதங்கத்தானை. மா + உயிர்-யகரவகரஉடன்படுமெய் இலக்கணப் போலி ... 760
43 ஐயமருந்திவை, அத்தனை வேதனை, அக்கரவ—உடன்படு மெய்யல்லாத யகர வகரங்கள் ... 780
44 கண்டகனுவின், வர்ராக—யகரவர்க்கத்தைமொழிமுதலெழுதும்பிழை... 800
45 மலருந்தி, குளப்படி,— குற்றியலுகரம் முற்றியலுகரம் ... 814

### திருவரங்கக் கலம்பகம்.

46 சீர் பூத்த முற்றியலுகரம் + உயிர் ... 828
47 காலாயிர, வைகலந்த, கொண்டல்கா, காயிலை 839
48 புலையாம், வாயினிரங்கினை. நீரிருக்க வேண்டலணி குற்றியலுகரம் + உயிர் 859
49 மறக்குமோ, தேனமரும், மானையெய்தவர், தேவடியான்—குற்றியலுகரம் + உயிர் மெய் இரட்டிப் புணர்தல் ... 871
50 குருகுறங்கு, வாழுமவுலி, வாடியோட, குற்றியலுகரம் + உயிர் = மெய் இரட்டிப் புணர்தல்-மெய்திரிதல் ... 891

## ஞான தீபம்

45, 46, 47, 48 ... 809, 827, 841, 867

## பிறவிடயங்கள்

27 மலர்வனம்—இன்னுதது மினிதாமே ... 531
32 „ தீயினுள் திங்கள் ... 611
38 பழமுதிர் சோலை—நாலடியார் நகை ... 707
39, 40 தத்துவஞான மென்று வேண்டு 721, 729
47 பழமுதிர் சோலை—கற்பகக்கனி ... 851

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

**பாடும் மோட்டார்:**—நியூயார்க்கில் சுமார் 5000 பாடும் மோட்டார்களைச் செய்திருக்கிறார்கள். மோட்டார் ஓட ஆரம்பித்ததும், ஆகாசத் தந்தி வழியாகப் பாட்டுக்களைக் கேட்கக்கூடிய முறையில் மோட்டாரிலேயே ஆகாசத் தந்தி அமைத்திருக்கிறார்கள். பாடும் மோட்டார்கள் இப்பொழுதுதான் உபயோகத்திற்கு வந்திருக்கின்றன.

* * *

**மஞ்சள் நிற மகிமை:**—இங்கிலீஷ் "ஜாம்" (பழச் சாறுகளின் கலவை) பாக்டரி யொன்றில் ஈக்கள் நுழைவதே யில்லையாம். அதற்குள் 15,000 டன் ஜாம் ஜாடிகள் இறுக மூடப்படாமல் வைத்திருந்தும் ஈக்கள் நுழையாததற்குக் காரணம், அக்கிடங்கின் சாளரங்களெல்லாம் மஞ்சள் அம்பர் கண்ணாடியால் இணைக்கப்பட்டிருப்பதால் அவற்றின் மூலம் வரும் 'அல்ட்ரா வயலெட்' கிரணங்கள் ஈக்களை வர வொட்டாமல் தடுக்கின்றதாம்.

* * *

**கூந்தலும் காந்தனும்:**—அமெரிக்காவில்லாஸ் ஏஞ்சல்ஸ் என்னுமிடத்தில் வசித்துவந்த ஹில்டா எல்சைன் என்னும் பெண்ணுக்கு அழகிய நீண்ட கூந்தலுண்டு. ரோமமும் தங்கநிறமா யிருந்ததால், பல சித்திர நிபுணர்கள் அப்பெண்ணின் கூந்தல் அழகைக்கண்டு வியந்து தங்கள் சித்திரங்களுக்கு அப்பெண்ணை மாதிரியாக வரைந்து வந்தரார்கள். இதனால் அப்பெண்ணுக்கு லாபமும் கிடைத்துவந்தது. ஆனால், அப்பெண்ணின் கணவன் அந்தக் கூந்தலைக் கத்தரித்துவிட்டு, தற்காலப்பெண்களைப்போல் "கிராப்" வைத்துக் கொள்ளும்படி வற்புறுத்திவந்தார். அப்பெண்ணுக்கு இஷ்டமில்லை. அழகிய அந்தக்கூந்தலை இழக்க மனமின்றித்தத்தளித்துக்கொண்டிருந்தாள். இறுதியில்கணவனிலும் தன் அழகிய கூந்தலையே அவள் உயர்வாகக் கருதி புருஷனிடமிருந்து பிரிந்து, விவாகரத்துசெய்து கொண்டாள்.

* * *

**நிர்வாணக் கலியாணம்:**—சென்ற நவம்பர் மாதம் 24வ அமெரிக்கா லாஸ் ஆஞ்ஜெலிஸ் என்னும் நகரத்திற்கு அணித்தாயுள்ள ஒரு காட்டில் திறந்த வெளியிலே பசும்புல் தரையிலே ஒரு நூதன விவாகம் நடந்தேறியது. அந்தக் கோஷ்டியினர் நிர்வாணக் கோலமாய் அந்த விவாக சம்பிரமத்தைக் கொண்டாடினர். மணமகனாகிய ஜேம்ஸ் குட்மான் ஒரு ரெயில்வே கார்டு. அவர் ஆம்மண சித்தாந்தத்தில் அழுத்தமானபற்றுடையவர். வாராந்தவிடுமுறைக்காலங்களில் சட்டை சல்லடங்களை அவிழ்த்தெ... விட்டு ஆனந்தமாயிருக்க இத்தகை... நாடினவர். விவாக தம்பதிகள் புரோ...ம் செய்து வைத்த பாதிரியார் தோழிப் பெண்கள், 30 பேர், விருந்தினர்கள் எல்லாரும் எவ்வளவு ஆடைகளை அகற்ற முடியுமோ அவ்வளவு குறைந்த கௌபீன தாரணத்துடன் இயற்கை அழகுடனும் எழில் பெற விளங்கினர். மாப்பிள்ளைத் தோழன் மட்டும் வழக்கமான உடையுடன் பாதகுறட்டுக் கட்டையணிந்திருந்தார். சடங்கு முடிந்ததும் பெண் வாழ்க்கைப்பட்டதற்கு அறிகுறியாகக் கையில் இடப்பட்ட வைரமோதிரத்துடன் எல்லோரையும் வரவேற்று விருந்துண்டு (Honey moon) தேன் மதி இன்பந் துய்க்கக் கணவனுடன் புறப்பட்டார்கள். அமெரிக்காவில் நடந்த நிர்வாணக் கலியாணங்களில் இதுவே முதல் தடவையானது.

* * *

**நிர்வாணப் பிரசவம்:**—பிவலியோ போலிஸ் எனும், தீவில் நிர்வாண முறையை அனுஷ்டிப்பவர்கள் குடியேறியுள்ளார். அத்தீவில், ஆண் பெண் யாவரும் நிர்வாணமாகவே இருக்கிறார்கள். அங்குச்சமீபத்தில் ஒருபிரஞ்சுப் பண்டிதருக்கு ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்ததும் 8 இராத்தல் நிறை யிருந்தது நிர்வாண முறைப் பிரசவத்தையே, பரீட்சார்த்தமாக அனுஷ்டிப்பதென்று அப்பிரதேசத்தில் தீர்மானிக்கிறார்கள். குளிர் கடுமையாக இருக்கிறதெனினும், பிரஞ்சுப் பண்டிதரின் மனைவி அதிகாலையில் வழக்கம்போல் ஸீன் நதியில் நீந்தி, பின்னர் 5-மைல்கள் நடந்தார். தாயும் குழந்தையும் சுகமாக இருக்கிறார்கள்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து த...ம்பிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 துலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)